முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 22—6—56 | வெள்ளி | ஒலி 11

அன்புள்ள முதலமைச்சர்

அவர்களுக்கு,

பல நாட்களாகவே ஆசையுண்டு தங்களுக்கு மடல் வரைய வேண்டுமென்று! எழுதுவோம்—எழுதுவோம் என்று இருந்து விட்டேன்—பிறகு எழுதா விட்டல்தான் என்ன என்ற எண்ணமும் பிறந்தது! இடையிலே ஒரு சந்தேகம்; "முதலமைச்சர்" என்று முகவரி பொறிக்கக் கூடிய காலம் மறுபடியும் வருமோ; வராதோ—என்று!

அதனால் இப்போதே அந்த முகவரியிட்ட முடங்கல் ஒன்று தீட்டிவிடுவோம் என்று விரும்பினேன். விருப்பத்தின் விளைவே இது! நான் தங்களுக்கு என்ன எழுதப் போகிறேன்-பர்மிட்;லைசென்ஸ் கேட்டா! பக்கத்து வீட்டுக்காரன், மாமன், மச்சான், சகல பாடிக்கு உத்தியோக உயர்வுக்கு சிபார்சு செய்தா? அல்ல; அல்ல அமைச்சரே! அத்தகைய கடிதமல்ல இது!

விண்ணப்பமில்லாவிட்டால், வெறும் உபதேசமோ என்று நினைப்பீர்கள். விண்ணப்பமுமல்ல; வெறும் உபதேசமுமல்ல!

இது போன்ற விண்ணப்பம்—விடுதலை வீரர்களுக்குப் பழக்கமில்லாத ஒன்று!

உபதேசம்—உங்களுக்கு நான் வழங்க வயது கிடையாது எனக்கு!

பொதுவாக நிலைமை விளக்கமே இந்தக் கடிதம்!

தாங்கள் தமிழ் நாட்டுக்கு மந்திரியாக...(மன்னிக்கவும்—சென்னை ராஜ்யத்துக்கு!...தமிழ் நாடுதான் உலகிற்குத் தெரியாதே!) வந்தது கண்டு பலர் பாராட்டினார்கள்! பலர் வயிறெரிந்தார்கள்! சிலர் பேதமின்றி தங்களை ஆதரிக்கத் தொடங்கினார்கள்!

இந்த மூன்று வகையானவர்கள் யார் யார் என்று தங்களுக்குத் தெரியும். மூன்றாவது வகை திராவிடர் கழகத்தார்! இரண்டாம் வகை, காங்கிரசிலேயே இருக்கும் "காஷியஸ்"கள்! முதல் வகையினரில் தி. மு. கழகத்தாராகிய நாங்களும் இடம் பெறுகிறோம். அதாவது "பாராட்டுகிறோம்—ஆதரிக்கவில்லை" என்று தெள்ளத் தெளிவாக கொள்கையை விளக்கியவர்கள்! அந்தப் பாராட்டும், ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தை புதைகுழிக்கு அனுப்பியதற்காகவேயென்றும் கூறியிருக்கிறோம். தாங்கள் எங்களிடம் எதிர்பார்த்ததோ வேறு! "பச்சைத் தமிழர் காமராசர்!" என்று பச்சை குத்திக் கொண்டு நாங்களும் அலைவோம் என்று நம்பினீர்கள்.

திராவிடநாடு என்பது திராவிட இனத்தில் பிறந்த ஒருவர் ஆள்வதுதான் என்றும்—அப்படி ஆளுகிறவர் டில்லிக்கு அடிமையாக இருந்தாலும் கவலையில்லை என்றும்-நாங்கள் கொள்கை வகுத்துக் கொண்டிருப்பதாகத் தாங்கள் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டீர்கள்! அந்தக் கணக்கு சரியென்பது போல "பச்சைத் தமிழர்" பட்டம் அவசர அவசரமாகத் தங்களுக்கு அளிக்கப் பட்டது! ஏமாந்தீர்கள்! ஏமாற்றம் எங்கள்மீது தங்கள் பாய்ச்சலுக்குக் கொடியேற்றி வைத்தது!

இவர்கள் ஏன் நம்மை நத்திக் கிடக்க மறுக்கிறார்கள் என்று கேட்டீர்கள்!

"எமை நத்துவாய் என எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடோம்!" என்ற புரட்சிக் கவிஞரின் பாடலைத்தான் பதிலாகப் பெற முடிந்தது எங்களிடமிருந்து!

"எதிரியா நான்?" என்று நீங்கள் கேட்டதைவிட, "அவர் எதிரியா?" என்று ஆக்ரோஷத்துடன் விருக்குறி எழுப்பினர் தங்கள் ஆதரவாளர்கள்!

எதிரியைவிட பயங்கரமானவனல்லவா; எதிரிக்குத் துணை போகிறவன்! இதை அறியாதவர்கள் எங்கள் மீது காய்ந்தார்கள்; காய்கிறார்கள்; காய்ந்து கொண்டேயிருப்பார்கள்!

மீர்ஜாபருக்கு சரித்திரத்திலே என்ன பட்டம்?

இராமனைவிட அதிகமாக விபீஷணன் இகழப்படுவதின் இரகசியம் என்ன?

அதே காரணங்கள் டில்லிக்கு ஏவலாளராக இருக்கும் தங்களுக்கும் பொருந்துமன்றோ!

திராவிடத்தின் விடுதலைக்கு முரசு கொட்டுகிறதேசிய உணர்ச்சி படைத்தவர்கள்-நாங்கள்! —தாங்களோ உப கண்டத்து ஆதிக்க வெறியர்களின் ஆள் அம்புகளிலே ஒருவர்! நாங்கள் கொள்கை காப்போர்—தாங்களோ கோடரிக்குக் காம்பு! தலை யுடைப்போர் நாங்கள்! எம் தலையறுப்போர் நீங்கள்! தென்னகப் பூங்காவுக்கு வேலியமைக்கும் வேலை எமக்கு! வட நாட்டு மாடுகளை அதில் மேய்க்கும் வேலை உமக்கு!

இரு சக்திகள்! ஒன்று விடுதலை சக்தி! மற்றொன்று அடிமைப்படுத்தும் ஆதிக்க சக்தி இரண்டும் கைகுலுக்க இயலும் என பித்தன்கூட எண்ணமாட்டான். சிலர் எண்ண வில்லை; அப்படிப் பேசினார்கள்! ஆதரவு மழை பொழிந்து தங்களைக் குளிப்பாட்டினார்கள்! பாராட்டுப் படியோடு நாங்கள் நின்று விட்டோம்.

ஆதரவு என்கிற அடுப்பங்கரை — அந்தப்புரம் வரையில் வரவிரும்பவில்லை! எங்கள் 'அரசியல் கற்பு' அதற்கு இடந்தரவில்லை!

மு. கருணாநிதி

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்



திரு. மு. க. இரண்டாவது மாநில மாநாட்டுத் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களே! புரட்சிக் கருத்துக்கள் பல கேட்டும் அமைதியோடு மாநாட்டுத் திடலில் கூடியுள்ள தோழர்களே! தாய்மார்களே! வணக்கம்.

கடந்த மூன்று நாட்களாக மாநாட்டுத் திடலில் புரட்சிப் புயல்... இடையே பெரு மழையோடு வீசக் கண்டீர்! புரட்சிகளைப் பற்றிக்கேட்டு புரட்சி வீரர்களாக நீங்கள் மாறுமுன் 'அமைதி'யின் தன்மையையும் அதன் உண்மையையும் அறிய வேண்டுமென்று நமது பொதுச் செயலாளர் கருதினாரோ என்னவோ, எனக்கு 'உலக அமைதி' யென்ற தலைப்பைத் தந்து விட்டார்.

யுத்தத்தின் பயங்கர விளைவுகளை நாம் கண்டோம்...எனினும் யுத்த மேகங்கள் இன்னும் கலைந்தபாடில்லை! நாகசாகி, ஹிரோஷிமா போன்ற பயங்கரப் புண்களை ஏற்படுத்தியுள்ள அணுகுண்டை இன்னும் வளர்த்தவண்ண முள்ளனர். மனித இனம் வாழ பல வசதிகளைத் தேடித் தந்த ஆராய்ச்சிசாலைகள் தான் அழிவு சக்திகளை உற்பத்தி செய்கின்றன! மனித உழைப்பைக் குறைக்க உதவிய விஞ்ஞானியின் அறிவுதான் மனித உயிரைக் குடிக்கும் போர்க்கருவிகளை தயார் செய்கிறது மலரை உற்பத்தி செய்யும் 'ரோஜாச்செடி' முள்ளையும் உற்பத்தி செய்வது போல நன்மைகள் பல தேடித்தந்த அறிவுக்கூடங்கள் தீமைகளைத் தோற்றுவிக்கவும் காரணமாய் உள்ளது! உலக அமைதியை நிலவச் செய்வதும் குலையச் செய்வதும் விஞ்ஞானகூடங்களே. உலக அமைதி விஞ்ஞான அறைகளின் அறிக்கைகளைப் பொறுத்துள்ளது! ஆனால் விஞ்ஞானக் கூடங்களெல்லாம் வல்லரசுகளின் சொல்லில் ஆடும் பம்பரமாய் உள்ளன!

'உலக அமைதி' இன்று வல்லரசுகள் போடும் வாய்ப்பந்தல். ஜினிவா மாநாடும், பாரிஸ் ஒப்பந்தமும், பாண்டுங் மாநாடும், பாக்தாத் ஒப்பந்தமும், உலக அமைதிக்காக நடைபெறுபவைகள் தான் என்று சொல்லுகிறார்கள்! வல்லரசுகளின் வாதங்களெல்லாம் "வானவில்லில் தோன்றும்வண்ணங்களைக் கொண்டு ஓவியம் தீட்டித் தருகிறேன்" என்று சொல்லும் எத்தனைப் போல் உள்ளது!

கணவனைக் கொன்றவளும், கன்னிப் பருவத்தைக் கள்ளக் காதலனோடு கழித்தவளும், கொண்டவனை விட்டு, கண்டவனோடு சுற்றுபவளும் கூடி "கற்பிற்கு இலக்கணம் கூறுவது போல, அணுகுண்டு ஆராய்ச்சி நடத்துபவர்களும, நீர்வாயு குண்டு சோதனை செய்பவர்களும், அழிவு சக்திகளை உற்பத்தி செய்பவர்களும் கூடி உலக அமைதிக்கு வழிகாண முற்படுகின்றனர்!

இரத்த ஆறுகளை ஓடவிட்டவர்கள், மண்பிடிக்கும் ஆசைக்கு மனித இனத்தைப் பலியிட்டவர்கள் கூட இன்று யுத்தம் துவங்கினால் மனிதப் பூண்டே அற்றுப் போகும் நிலைதான் ஏற்படும் என்று கூறுகின்றனர். இருப்பினும் படை பலத்தை எவரும் குறைத்தனரில்லை! எந்த வாய்கள் யுத்தத்தின் பயங்கர எதிரொலிகளை படம் பிடித்துக் காட்டுகின்றனவோ, அதே வாய்களிலிருந்து வரும் வார்த்தைகள் விஷம் கலந்தவைகளாக உள்ளன! அணுகுண்டுகளை ஒரு கரத்தே பகிரங்கமாக பிடித்துக் கொண்டே மற்றொரு கரத்தால் அமைதிக்குக் கையொப்ப மிடுகின்றனர்! 'போர் ஓய்வு' மாநாட்டிற்குப் பிரதிநிதிகளை அனுப்பும் அரசுகள்தான் போர் கருவிகளின் வல்லமையை பரிசோதிக்க விஞ்ஞானிகளை அனுப்புகின்றனர்!

சமாதான அறிக்கைகளை வெளியிடுகின்றனர்! அதன் ஈரம் காயுமுன் சமுத்திரத்தில் குண்டுகளைப் போட்டு பரிசோதனை நடத்தும் சேதி வெளியாகிறது. கற்பின் மேன்மையைப் பற்றி வாயால் உபதேசித்தவாரே நள்ளிரவில் பள்ளி அறை வரத்தவருதே என்று கன்னிக்கு கண் ஜாடை காட்டுவதுபோல வல்லரசுகள் அமைதியைப் பேசிக்கொண்டே போர் முஸ்தீபு செய்த வண்ணம் உள்ளது!

உலகில் யுத்தம் தோன்றக் காரணமே வியாபாரப் போட்டிதான்! தங்கள் நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை விற்பனை செய்ய நிரந்தர 'மார்க்கெட்' தேடுகிறது, ஒவ்வொரு வல்லரசும்! மேற்கத்திய உலகத்திற்கு கிழக்கத்திய உலகம் வியாபாரச் சந்தையாகப் பயன்பட்டு வந்தது! இப்படி சந்தையாகப் பயன்பட்ட நாடுகளெல்லாம் காலப்போக்கிலே கண் திறந்து பார்க்கத்துவங்கி

திருவண்ணாமலை நகரசபையின் முன்னாள் தலைவர்-எந்நாளும் திராவிடத் திற்கெனத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் தோழர்; **ப. உ. சண்முகம் அவர்களின்** மாநில மாநாட்டுச் சொற்பொழிவின் சுருக்கம் தரப்படுகிறது; சுவையுங்கள்! (ஆ - ர்.)

விட்டன! எனினும் வல்லரசுகள் தன் இரும்புப் பிடியினின்றும் விட மறுக்கின்றன! விடுதலைப் போராட்டம் துவங்குகிறது! யுத்தத்தின் நிழல் அங்கு தென்படுகிறது!

இன்று யுத்தம் கருத்தரித்துள்ள நாடுகள் பலப்பல! அப்பயங்கரக் கருவை எவரும் கலைக்கவில்லை! அதுவும் கலைந்துபோகவில்லை! வல்லரசுகளின் வார்த்தைகளால் வளர்ந்த வண்ணம் உள்ளது! கொரியாவிலே யுத்தம் தோன்றியது! வட கொரியா, தென் கொரியா போராட்டம் என்று துவங்கியது! ஆனால் உண்மையிலேயே செஞ்சீனாவிற்கும், அமெரிக்காவிற்கும் போர் நடந்தது! கொரியா வல்லரசுகளின் விஷப் பரீட்சைக்கு ஆளாகியது! சமாதான பேச்சு எழுந்தது! துப்பாக்கிகளிலிருந்து தோட்டாக்கள் வெளி வர வில்லையே யொழிய ஏந்திய துப்பாக்கிகளை எவரும் கீழே வைத்தனரில்லை.

பார்மோசா தீவிலே ஒளிந்துள்ள சியாங்கே ஷேக் தன் துப்பாக்கியை எடுத்து செஞ்சீனா நோக்கி குறி பார்த்தான்! அந்தத் துப்பாக்கிக்குள் அமெரிக்கத் தோட்டா இருப்பதைக் கண்டது ரஷ்யா! அமெரிக்கத் தோட்டா வெளி வந்தால் 'ரஷ்ய பீரங்கி முழங்கும் என்றான் காலஞ்சென்ற ஸ்டாலின்! தோட்டா வெளி வரவில்லையெனினும் குறி பார்க்கும் வேலை நிற்கவில்லை!

இந்தோ சீனாவிலே வெடிகுண்டு சப்தம் கேட்டது! வட வியட்நாம்! தென் வியட்நாம் போர் என்றனர்! பிரஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து 'ஹோசிமின்' போராடினார்! நேரு தலையிட்டார்! ஜினிவாவிலே வல்லரசுகள் கூடினர்! ஒப்பந்தம் ஏற்பட்டது! போர் அப்போது நின்றது என்றாலும் இப்போது அதன் அறிகுறிகள் தென்படுகின்றன! தென் வியட்நாம் தலைவன் 'டின்டீம்' வட வியட்நாம் தலைவன் ஹோசிமின்னை மறைமுகமாக போருக்கு அழைக்கிறான்!

சிங்கப்பூரை பிரிட்டிஷ் பிடியிலிருந்து விடுவிக்க அந்நகரின் பிரதமர் டேவிட் மார்ஷல் முயல்கிறார்! பேச்சு வார்த்தைகள் லண்டனில் இன்னும் நடைபெறுகிறது! ஆனால் விடுதலை கிடைக்காதென்பதின் அறிகுறி தென்பட்டு விட்டது! விடுதலை கிடைக்காவிட்டால் உலக அமைதிக்கே பங்கம் விளையுமென்று அறிவித்து விட்டார் டேவிட் மார்ஷல்!

சிங்களத்திலே தமிழர் போராட்டம் காண்கின்றோம்! உலக அமைதிக்கு ஊறு தேடும் நிலைமை வளர்ந்த வண்ணம் உள்ளது!

நாகர்கள் இந்தியாவிலிருந்து விடுதலை பெற 'பீசோ'வின் தலைமையிலே போராட்டம் துவங்கியுள்ளனர்! வெடி குண்டுகள் வெடித்த வண்ணம் உள்ளன! விடுதலை வேட்கை தணிந்தபாடில்லை; அடக்கு முறையும் குறைந்தபாடில்லை!

வடவர் பிடியினின்றும் விடுபட திராவிடர்களாகிய நாம் போராடுகின்றோம்—அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில்! போராட்டம் பயங்கர கட்டம் அடையவில்லை என்றாலும்; என்றும் அடையாது என்று ஆரூடம் கணிக்க என்னால் இயலவில்லை!

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே துவங்கிய 'காஷ்மீர்' தகராறு இன்னும் முடியவில்லை! போரின் சாயல் தென்படுகிறது.

மத்திய கிழக்கிலே இஸ்ரேல் எகிப்து போட்டம் துவங்கியது! சப்தம் இன்று குறைந்திருந்தாலும் சலசலப்பு அடங்கவில்லை!

சைப்ரஸ் தீவின் விடுதலை கோரி 'மக்ரியாஸ்' என்னும் பாதிரியார் பிரிட்டனுக்கு எதிராகப் போர் துவங்கினார்! நாடு கடத்தப்பட்டார்! எனினும் நாச வேலைகள் நிற்கவில்லை!

அல்ஜீரியாவின் விடுதலை கோறி அந்நாட்டுத் தலைவன் பெர்ஹன்ட் அபாஸ் பிரான்சை எதிர்த்து போராடிய வண்ணம் உள்ளான்! பிரான்சின் பலம் பொருந்திய ராணுவம் அல்ஜீரியாவின் விடுதலை வேட்கையை அணைக்க அரும்பாடு படுகிறது எனினும் அது அழியவில்லை! யுத்தத்தின் சப்தங்கள் எழுந்த வண்ணம் உள்ளது!

ஜெர்மனியை மூன்று கூருகப் பிரித்து மூன்று வல்லரசுகள் பிடித்துக் கொண்டு அடக்கி ஆளுகின்றன! அந்நாட்டின் விடுதலை குறித்து வார்த்தை எழும்போதெல்லாம் யுத்தத்தின் எதிரொலி கேட்ட வண்ணம் உள்ளது!

வையகம் இத்தகைய பயங்கர சூழ்நிலையில் சிக்கியுள்ளது. உலக அமைதி எப்படி நிலவும்? எங்கும் யுத்த முரசம் ஒலிக்கிறது! அமைதி எங்கே நிலவப் போகிறது! புயலிடை சிக்கிய பூந்தோட்டம் போல வையகம் இன்று யுத்த வெறியர்களிடையே சிக்கியுள்ளது!

மாஸ்கோ—வாஷிங்டன்! இவை இரண்டும் ஒன்றுபட்டால்தான் உண்டு வாழ்வு! ஆனால் ஒன்றுபட எந்தவித சூழ் நிலையும் தென்படவில்லை! ராட்சச குண்டுகளை வைத்துக் கொண்டு வையகத்தை மிரட்டுபவர்களே இவர்கள்தான். இந்த இருவருக்கும் இடையேதான் பண்டித நேரு 'நடு நிலைமை' என்ற தட்டில் அமர்ந்து கொண்டு ஊஞ்சலாடுகிறார்! இதைத்தான் மகத்தான சாதனை என்கிறார்கள்!

அமெரிக்காவிட மிருந்து 'உதவி' என்ற பெயரால் ஏராளமான கடனை வாங்கியுள்ளார் ஆசியாவின் ஜோதி! இதையும் ஒரு பெரிய சாதனை என்கிறார்கள் பாரத புத்திரர்கள்! பண்டிதரின் முகக்காந்தி

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

சென்னை 22--6--56 வெள்ளி

'வெள்ளைச் சட்டைத் தொழிலாளிகள்!'

★ ○ ★

பாடாத தேனீக்கள்; உலவாத தென்றல்; பசியாத நல் வயிறு— இருந்ததில்லை யென்று கவிதையிலே படித்திருக்கிறோம்.

ஆனால் நம் மாநிலத்து முதலமைச்சர் காமராசரோ பசியாத வயிறு இந்த நாட்டு என். ஜி. ஓ.க்களிடம் இருப்பதாக நினைத்து, இறுமாப்பில் மூழ்கிக் கிடப்பதையும் காண வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இன்றோ அந்த ஆயிரமாயிரம் என். ஜி. ஓ. க்களின் வயிறு ஓங்காரக்கூச்சல் எழுப்ப-அவர்கள் உரிமைச் சங்கெடுத்து ஊத ஆரம்பித்து விட்டார்கள் !

என். ஜி. ஓ. க்கள் இந்த நாட்டு அரசியல் நிர்வாக வண்டியை இழுத்துச் செல்லும் இஞ்ஜினைப் போன்றவர்கள்; காலை முதல் மாலை வரை கடும் உழைப்பைக் காகிதக் கட்டுகளிலே கொட்டி, ஒட்டிய உடலும், தேய்ந்த கண்ணும் கொண்ட திருவுருவங்கள்!

ஆமாம்; அன்று வீராதி வீரர்களையும் இரணகள சூரர்களையும் ஈந்து ஈந்து பெருமைப்பட்டதே தமிழகம், அது இன்று பெருமைப்படக் கூடிய ஒரே துறை ஒப்பற்ற குமாஸ்தாக்களை-இறகுபேனா ஓட்டிகளை—உற்பத்தி செய்திருப்பதுதான் !

தடித்த நாவால் தமிழரை இகழ்ந்த கனக விசயரின் தலையை நெரித்த இனம், வீரத்தில், அதிதீர பராக்கிரமத்தில் புகழ்பெற்று விட்டாலும் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான குமாஸ்தாக்களைத் தயாரிப்பதிலே முதலிடம் பெற்றிருக்கிறது !

இங்கு பக்ராநங்கல் போன்ற மாபெரும் அணைக்கட்டுத் திட்டங்கள் கிடையாது; சித்தரஞ்சன்களும் இல்லை — ஒன்றே ஒன்று இருக்கிறது. கிழக்கிந்தியக் கம்பெனியாரின் காலத்திலிருந்து கீர்த்தி பெற்ற குமாஸ்தாக்களை நம் மாநிலம்தான் தந்து வருகிறது !

—அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் குறையைக் கூட கவனிக்க முடியவில்லை, எல்லோர் நலனுக்கும் உழைப்பதற்காகவே பதவியேற்றிருக்கிறோம் என்று 'பந்தா' குறையாமல் சொல்லிக் கொள்ளும் காமராசரால்!

அவர்கள் அப்படி யொன்றும் அதிகப்படியான சம்பளம் கேட்டு விடவில்லை. மத்திய அரசாங்கம் தனது பணியாளர்களுக்குத் தரும் தொகையைத்தான் கேட்டு வருகிறார்கள்.

மத்ய அரசில்	சென்னை அரசில்
சம்பளம் ரூ **55**	சம்பளம் ரூ **45**
பஞ்சப்படி ரூ **50**	பஞ்சப்படி ரூ **22**
மொத்தம் ரூ **105**	மொத்தம் ரூ **67**

இரு தராசுத் தட்டுகள்; அதிலே சென்னை மாநிலத்து என். ஜி. ஓ.க்கள் பால் நீட்டப்படும் தட்டு கனக் குறைவால் உயர்ந்திருப்பானேன்? — என்று தான் கேட்கிறார்கள், அவர்கள்! நமது அனுதாபத்தையெல்லாம் ஒரு சேரப் பெற்றிருக்கும் என். ஜி. ஓ.க்களின்' 'எஜமானர்களைப் போன்றவர்கள்' சென்னை அரசினர்; அந்த முறையிலே கேட்கிறார்கள், 'அய்யா காமராசரே! உமது எஜமானர்களாம் மத்ய அரசினர் எம்போன்றவர்களுக்குத் தரும் கூலியை எமக்கும் தாருங்கள்;' என்று உரிமையைக் கேட்கிறார்கள்; உண்மையைக் காட்டிக் கேட்கிறார்கள்.

இன்று நேற்றல்ல; முப்பத்தாறு ஆண்டுகளாக இந்த நொந்துபோனவர்கள் சரியான ஊதியம் வேண்டுமென்று சமர் தொடுத்து வருகிறார்கள்!

அவர்கள் பெறும் ஊதியம் மத்ய-சர்க்காரின் கீழிருக்கும் கடைசி ரகப் பணியாளர் பெறும் ஊதியத்தைவிடக் குறைவானது!

முதல் தேதியன்று அவர்கள் பணப் பெட்டியை-இல்லை; இல்லை; கடன் கொடுத்த சேட்டு, மூல்தானிகளின் பணப்பெட்டியை அடைகிறதே அந்தச் சம்பளத்தொகை திரு. கொச்சி மாநிலத்து உத்யோகஸ்தர்கள் பெருவதைவிட மிக மிகக் குறைவானது!

தொழிலாளத் தோழர்கள் கூட போர்க்காலத்துக்கு முன்பு பெற்றதைவிட மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகமான தொகை பெறுகின்றனர். இவர்கள் பெறும் தொகையோ 'இத்தனை மடங்கு பெருகிற்று' என்று சொல்லத்தக்க அளவுக்கு உயரவேயில்லை!

இன்னும் சொல்லப் போனால் அவர்கள் பெற்றிருக்கும் அனுகூலங்கள் இந்த நாட்டு பத்திரிகையாளர் பெற்றிருப்பதைவிடக் குறைவானது!

—இதுதான் 'வெள்ளைச் சட்டைத தொழிலாளர் வர்க்கமாம்' என். ஜி. ஓ.க்களின் இழிதகை நிலைமை!

சென்ற மே திங்கள் சென்னையிலே மாநாடு கூட்டி அவர்கள் எழுப்பிய எக்காள ஓசை காமராசரின் செவிட்டுக் கோலத்தைக் கலைக்க முடியாது போகவே, சென்ற கிழமை தூது கோஷ்டியொன்றை டில்லிக்கு அனுப்பி வைத்தார்கள், இந்நாட்டுப் பிரதமர் நேருவைக் கண்டு, பேசி, குறை தவிர்த்திடும் விதம் கண்டு வர!

"நிர்வாகத் தேரின் அச்சாணி நிகர்த்தவர்கள் வந்திருக்கின்றனரே அவர்களோடு அளவளாவுவோம்; உள்ளம் தொடுவோம்; கோரிக்கை தெரிவோம்; பின் அதைக் களைவோம்!"-என்று நினைத்து புன்முறுவல் தவழ மோதிலால் மைந்தர் அந்தப் பிரதிநிதிகளை வரவேற்றிருப்பார் என்று தானே நினைக்கிறீர்கள்?

இல்லை; இல்லவே இல்லை! நிராகரித்து விட்டார், பண்டிதர்!

இது மாநில அரசு சம்மந்தப்பட்ட பிரச்சினையாம்; மேலும் அவர் வெளிநாடு செல்வதால் தூது கோஷ்டியைக் காண அவருக்கு அவகாசம் இல்லையாம்!

அல்ஜீரியாவிலே நடந்து வரும் போராட்டங்களைத் தவிர்க்க வழியுரைக்கிறார், நேரு!

ஆனால் தாங்கொணாத் தொல்லைகளைத் தாங்கி வரும் என். ஜி. ஓக்களின் வயிற்றுப் போராட்டத்துக்கு வழிகாட்ட மறந்து விட்டார்!

காமன்வெல்த் நலத்திற்காக இங்கிலாந்திலே, ராணி எலிசபெத்தையும், இதர நாட்டுப் பிரதமர்களையும் சந்திக்கப் போகிறவர் சாமான்யர்களின் பிரதிநிதிகளைச் சந்திக்க மறுத்துவிட்டார்!

—காங்கிரஸ் ஆட்சி பீடம் கதியற்றோர்களுக்குத் தரும் மட்டு, மரியாதை, கௌரவம்-எல்லாம் இப்படித்தானிருக்கும்! என்பதை உலகுக்கு அறிவித்து விட்டார்!

இறுதியாக என். ஜி. ஓ.க்கள் காமராசரிடமே திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்கள்—அவருடைய கிருபா கடாட்சம் இருந்தால்தான் சம்பள உயர்வு கிடைக்கும் என்ற பின்னணியோடு !

சென்னை மாநாட்டுத் தீர்மானப்படி அவர்கள் வகுத்திருக்கும் போராட்டத் திட்டங்கள் இவைதான் —

1. ஜூலை மாதம் முதல் தேதியன்று சம்பளம் வாங்க மறுப்பது.

2. ஜூலை 16ந் தேதிக்குள் தேர்தல் வைத்து ஆகஸ்ட் திங்களில் ஒரு மணி நேரம் அடையாள வேலை நிறுத்தம் செய்வது.

3. அதற்குப் பின்பும் அரசினர் செவி சாய்க்கா விட்டால் மத்திய கமிட்டி தீர்மானிக்கும் ஓர் நாளில் மீண்டும் ஒரு முறை அடையாள வேலை நிறுத்தம் செய்வது !

—இப்படி அடுக்கடுக்காக 'ஆயுதங்களைத் தயாரித்திருக்கின்றனர் என். ஜி. ஓ. க்கள் !

அவர்கள் போராட்டம் நேர்மையை அடிப்படையாகக் கொண்டது; நீதியை நாடிச் செல்வது!

எனவேதான் தி. மு. கழகமும் நேசக்கரம் அசைத்து, போராட்டத்தில் வெற்றி பெற, வாகை சூட,மனம் நிறைந்த வாழ்த்துக்களை அணி வகுத்து நிற்கும் அந்த 'வெள்ளைச் சட்டைத் தொழிலாளிகள்' பால் குவிக்கிறது! 'நிறைவேறுக அவர்கள் கோரிக்கை' என்ற இருதயத்துடிப்புகளை அவர்கள்பால் தெரிவித்துக் கொள்கிறது!



"தீச்சுடர்" நிதிக்காக 17-5-56 அன்று திருப்பத்தூரில் சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. தோழர் முல்லை சத்தி அவர்கள் தலைமையில், தோழர் மு. க., சிந்தனை சிற்பி சிற்றரசு, நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி ஆகியோர் பேசினர்.

அமைப்பாளர் க. நெடுஞ்சோழன் தோழர் சிற்றரசு அவர்களிடம் நிதித்தொகையை அளித்தார்.

புகைப்படங்கள் ;
ஸ்டார் போட்டோ ஸ்டுடியோ
திருப்பத்தூர் (வ. ஆ.)

★ நீட்டோலை ★

[தொடர்ச்சி]

வெளிப்படையாக இல்லாவிட்டாலும் மனதிற்குள்ளே தாங்கள் போற்றிப் புகழ்ந்து தானிருப்பீர்கள் எங்களது கொள்கை உறுதியை!

தாங்கள் இருக்குமிடம் எங்களைப் பாராட்ட இடந்தரவில்லை; மாறாகப் பகைத்துக் கொள்ளத் தான் ஊக்க மூட்டியது! போதாததற்கு, மாநில மாநாடு வேறு வந்து சேர்ந்தது. "காமராசர் என்றால் யார்?" என்கிற தங்களது முழு உருவமும் வெளிப்பட்டுவிட்டது!

ஊமையாக இருந்தீர்கள் பல நாட்கள்! வாய் திறந்தால் எப்படியெப்படி மணியான வாசகங்களைக் கொட்டுவீர்களோ; முத்து உதிருமோ? முல்லை மழை பெய்யுமோ? முக்காலத்துக்கும் பொருத்தமான கருத்துக்கள் இறையுமோ? என்றெல்லாம் ஏங்கி எதிர்பார்த்துக் கிடந்தது நாட்டின் ஒரு பகுதி!

வாய் திறந்தீர்கள் — பிப்ரவரி இருபதுக்குப் பிறகு!

அம்மவோ; தமிழ்த்தாய் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு கதறினாள்! "நான் பெற்ற மகனா இவன்!" என்று ஒப்பாரி வைத்து ஓலமிட்டாள்! அந்த அளவுக்குத் தமிழ் மீது பழி சுமத்தினீர்கள்! கத்துகடல் தாண்டிச் சென்று முத்து முத்தாக எண்ணங் கற்பித்த தமிழன்னையை உலகிற்குத் தெரியாது என்று உரையாற்றினீர்கள்! (மன்னிக்கவும் உளறினீர்கள்!)

அதோடு விட்டீர்களா?...தி. மு. கழக மாநாடு கண்டு தீப்பட்ட மந்திக்கு தேள் கொட்டியது போல் ஆனீர்கள்! சந்து முனையில் சிந்து பாடுவோர் என ஒரு கூட்டமுண்டு; அவர்களையும் மிஞ்சி விட்டீர்கள்!

கொள்ளையடிப்பவர்கள்!

ரௌடிகள்!

பொறுப்பற்றவர்கள்!

காலிகள்!

நாடகமாடிகள்!

இப்படி யெல்லாம் அர்ச்சனைகள்!

பாவம்: நீங்கள் என்ன செய்வீர்கள்; உருவாகியிருக்கும் நிலைமை அப்படித் தங்களை ஆட்டிப் படைக்கிறது!

ஆச்சாரியார் விசுவரூபம் எடுத்து விட்டார். விபீஷணுதிகள் அவர் கூடக் கிளம்பி விட்டன. மூடிக் கிடந்த தட்சிணப் பிரதேசப் பிணம் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு விட்டது! நாங்கள்வேறு தேர்தலுக்கு நிற்பதாகப் பிரகடனப்படுத்தியிருக்கிறோம். தங்களைப் போன்ற பலஹீன உள்ளங் கொண்டவர்களுக்கு இந்த நிகழ்ச்சிகள் பதைப்பை உண்டு பண்ணத்தான் செய்யும்!

அந்தப் பதைப்பில் முன்னுக்குப் பின் முரணாகப்பேசியிருக்கிறீர்கள்! உங்களுக்கு முன் ஆச்சாரியார் மதுரையில் பேசினார்;

"தி.மு. கழகம் கேட்கும் திராவிடநாடும், தட்சிணப் பிரதேசமும் ஒன்றுதான்" என்று!

அதற்கு அண்ணா பதில் கூறினார்: "நாங்கள் கேட்பது மொழி வழி பிரிந்து இனவழி ஒன்றுபடும் திராவிடக் கூட்டாட்சி — அந்த ஆட்சி வடவர் பிடியிலிருக்காது" என்று!

அண்ணாவின் பதிலைப் படித்திருப்பீர்கள் தாங்கள்! தி. மு. கழகம் கோரும் திராவிடநாடு என்ன என்பதும் தங்களுக்குத் தெரியும். தட்சிணப் பிரதேசத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதும் தங்களுக்குப் புரியும்! "தட்சிணப் பிரதேசம் கோருகிற காங்கிரஸ்காரர்களும், தி. மு. கழகத்தாரும் ஒன்றே!" என்று ஒப்பிட்டிருக்கிறீர்கள்!

ரௌடிகள்!

பொறுப்பற்றவர்கள்!

காலிகள்!

என்றெல்லாம் ஏசினீர்: பேசினீர்—அதையாவது பொறுத்துக் கொள்வோம்; ஆனால் எங்களையும் காங்கிரஸ் காரர்களையும் ஒப்பிட்டிருக்கிறீர்களே; அதைப் பொறுத்துக் கொள்ளவே முடியாது. அமைச்சரே; பொறுத்துக் கொள்ளவே முடியாது!

தினமணி போன்ற தேசிய ஏடுகள் தங்களது பொறுப்பற்ற—கண்ணியமற்ற வார்த்தைகளைக் கண்டித்துத் தலையங்கம் தீட்டுகிற அளவுக்குத் தங்களது தகுதியை உயர்த்திக் (?) கொண்டிருக்கிறீர்கள்! தங்களது தட்சிணப் பிரதேச எதிர்ப்பு புதிய கல்வித் திட்ட எதிர்ப்பைப் போலவே பாராட்டப்பட வேண்டிய ஒன்று! எங்களது பங்கையும் அந்த எதிர்ப்புக்கு அனுசரணையாகத் தரக் கூடியகண்ணியம் பெற்றவர்கள் நாங்கள்! புதிய கல்வித் திட்டத்தைத் தாங்கள் எதிர்த்ததற்கும் தட்சிணப் பிரதேசத்தை எதிர்ப்பதற்கும் உள் நோக்கம் கற்பிப்பவர்கள் உங்கள் பாசறையிலேயே இருக்கிறார்கள்!

"முன்னது; முதல் மந்திரியாக ஆக! பின்னது—ஆன பிறகு அந்தப் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள!"

இப்படியெல்லாம் பேசப்படுகிறது காங்கிரஸ் கூடாரத்தில்! அதுபற்றி எமக்குக் கவலையில்லை; தட்சிணப் பிரதேசம் வேண்டாம் என்ற குரலை உறுதிப்படுத்த—பலப்படுத்த—குரல்எழுப்புவோரை உற்சாகப்படுத்த நாங்கள் தரும் வலிவு தேவையில்லை என்றால்—நாங்களே தனித்து நின்று அந்தத் தகாத் திட்டத்தை தரைமட்டமாக்க—என்றைக்கும் தயாராக இருக்கிறோம்!

ஆனால் அமைச்சரே ஒன்று! உமக்கு இருப்பதுபோல எமக்கு "அலகாபாத்" இல்லை; எம் உரிமைக் குரலை அடக்கி ஒடுக்க! "அமிர்தசரஸ்" இல்லை; எமது எண்ணத்தை வளைத்து விட! முன்பே, தாங்கள் தேவிகுளம் பீர்மேடு முழக்கத்தைச் சற்று தைரியமாகச் செய்திருந்தால் தட்சிணப் பிரதேசத் திட்டம் அடிபட்டுப் போயிருக்குமல்லவா? "தேவிகுளம் பீர்மேட்டைக் கேரளத்தோடு இணைக்காதே தமிழ் நாட்டுக்குக் கொடு" என்றால் அதற்கு என்ன பொருள்? தமிழ்நாடு தனித்த மொழி வழி மாநிலமாக வாழ விரும்புகிறது என்றுதானே பொருள்! தட்சிணப் பிரதேசம் வேண்டாமென்று தானே பொருள்! அந்தப் பொருளுணரா முடியாத காரணத்தால்—அல்லது உணர்ந்தும் உபகண்ட ஆதிக்க வெறியர்கள் தந்த உபத்திரவத்தால் உங்கள் அடிமைக் குரலுக்கு மதிப்பில்லாமல் போய் விட்டது! மாறாக எம்மைத் திட்டினீர்கள்!! இப்போது அமிர்தசரசைக் காட்டி மிரட்டுகிறார் ஆச்சாரியார்! அதற்கு விளக்கம் தருகிறீர்கள் தாங்கள்! விளக்கத்தினூடே திராவிடர் கழகத்திற்குப் பாராட்டும், தி. மு. கழகத்திற்கு வசை புராணமும் பாடுகிறீர்கள்!

காரணம்; திராவிடர் கழகம் தேர்தலில் நிற்கவில்லை—என்கிறீர்கள்!

பாம்பு, மகுடி ஊதுகிறவனைப் பாராட்டுகிறது!

கம்பு ஓங்குபவனைக் கடிக்கச் சீறுகிறது!

கையில் அகப்பட்ட தடியை எடுத்துக் காங்கிரஸ் பாம்பைக் கொல்லுவேன் என்ற, பெரியாரின் கையிலே இன்று மகுடி காணப்படுகிறது!

மகுடி நிறுத்தப்பட்டால், பாம்பு தன் பண்பைக் காண்பித்தேதீரும்! "பல் பிடுங்கப்பட்ட பாம்பு" என்று பதில் சொன்னாலும் சொல்லுவார்கள்! பல் பிடுங்கப்பட்ட பாம்பானால்; திராவிட நாட்டுப் பெட்டியில் அல்லவா சுருண்டு கிடக்கும்; டில்லி யென்ற புற்றிலே இருக்காதே!

இப்படியெல்லாம் நாங்கள் விளக்கம் தெரிவிக்காமல் இருக்க முடியுமா? நீங்களே யோசித்துப் பாருங்கள்!

பாவம்; உங்கள் நிலைமைமிகவும் நெருக்கடி! தட்சிணப் பிரதேசத் தலைவலியும்—தேர்தல் காய்ச்சலும்—கடுமையாகத் தாக்குகிறது தங்களை! 'அமிர்த சரஸ்' 'அலகாபாத்' மெருகைப் பெற்று, ஆச்சாரியார் கைக்கு வந்து விட்டால்; தாங்கள் "மாஜி" யாகித்தான் தீரவேண்டும்! 'மாஜி'யாகாமல் மீண்டும் மந்திரியாக வந்தால்தான் என்ன; அடிமைத் திராவிடத்தை வடபுலத்திற்கு அடகு வைக்கும் கங்காணிகளில் ஒருவராகத்தானே தாங்கள் இருக்க முடியும்! யோசியுங்கள்! தங்கள் நிலைமையை நன்றாக யோசியுங்கள்! இந்தக் கடிதத்தை வேண்டுமானால் குப்பைத் தொட்டியில் போடுங்கள்—ஆனால் குப்பைத் தொட்டியிலேயிருந்து மட்டும் வார்த்தைகளைப் பொறுக்கி எங்கள் மீது வீசாதீர்கள்!

அன்புள்ள
விடுதலை வீரன்!

"பகுத்தறிவு" வார வெளியீடு.

'பகுத்தறிவு' திங்கள் இதழை வார இதழாக வெளியிட முடிவு செய்யப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதால் ஜூன் மாத இதழ் நிறுத்தப்பட்டுள்ளது.

'பகுத்தறிவு' வார இதழ் ஜூலை முதல் வாரம் தொடங்கி வெள்ளி தோறும் சேலத்தினின்றும் வெளி வரும். பட்டியல் பாக்கி வைத்துள்ள விற்பனையாளர்கள் கருணை கூர்ந்து தொகையினை அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறேன்.

ஆசிரியர், **பகுத்தறிவு**
மேற்குத்தெரு, குமாரசாமிபட்டி,
சேலம் நகரம்.

பரமசிவன் நிஷ்டையில் ஆழ்ந்திருந்தார். உமாதேவியார் கூந்தல் அவிழ்ந்து தொங்க, ஆடை நெகிழ்ந்து அலங்கோலமாக மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடோடியும் வந்தார்.

"பிரபோ! ... பிராணபதே!" — உமா பிராட்டியார் ஓல மிட்டார். கைலை வாசனோ கண் திறக்கவேயில்லை!

உமா தேவியாரின் கண்களில் கோடமும் ஆத்திரமும் குழைந்து வெளிப்பட்டது. பரமசிவன் பக்கத்தில் ஓடினார். மலரன்ன கரங்களை அவருடைய தடந்தோளின் மீது வைத்து ஒரு உலுக்கு உலுக்கினார். சாம்பல் திருமேனியின் மீது லோக நாயகியின் விரல் பட்டவுடனே, தொட்ட இடம் சிலிர்க்கக் கண் விழித்தார் சிவன்!

"என்ன பார்வதி இது, காலம் இடந்தெரியாமல் இப்படி..."

பார்வதியின் ஆடை அலங்கோலத்தைக் கண்டவுடனே, அவள் நோக்கம் பற்றி சிவன் தப்புக் கணக்குப் போட்டு விட்டார்!

"காலமாவது இடமாவது...எல்லாம் சர்வ நாசம்...", பார்வதி புலம்பினார்.

சிவன் ஏதும் புரியாமல் விழித்தார்.

"என்ன உமா உளறுகிறாய்? நாச வேலை புரிவது நம்முடைய 'காபிரைட்' அல்லவா? அது நாமில்லாமல் எப்படி நடைபெறும்?"

"சற்று வெளியே வந்து பாருங்கள். எல்லாம் தெளிவாய்ப் புரியும்" என்று கூறிப் பரமசிவனின் கையை பிடித்துத் 'தரதர' வென்று இழுத்துக் கொண்டு வெளியே வந்தார் பார்வதி.

"வாசலில் நந்தியைக் காணோமே! எங்கே போய் விட்டான்?"—அய்யன் வினவினார். அம்மையும் ஏதும புரியாமல் சுற்றுமுற்றும் பார்த்தார். சற்று தூரத்தில் நந்தி தேவன் மூர்ச்சையாகக் கிடந்தான்.

"இதெல்லாம் என்ன குழம்பம் பார்வதி?"

"அதோ பாருங்கள்..." என்று பார்வதி சுட்டிக் காட்டினார். தூரத்தில் பசிபிக் மகாசமுத்திரம் தெரிந்தது; அங்கே ஒரு பெரும் புகை மண்டலம் தெரிந்தது. கடல் நீர் நூற்றுக் கணக்கான அடி உயரம் தளும்பி, கொந்தளித்துக் கொண்டிருந்தது.

"என்ன, பிரளயமா...?" பரமசிவன் திடுக்கிட்டுக் கேட்டார்.

"தங்களின் ஊழித்தாண்டவமில்லாமல் பிரளயம் எப்படி சுவாமி வரும்?"

"அதுதானே எனக்கும் புரியவில்லை!"

"இது மானிடர்களின் சேஷ்டை, அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு என்று ஏதேதோ கண்டு பிடித்து நாச வேலை செய்கிறார்களாம். அம்மாதிரி ஒரு பரிசோதனைதான் இது!" உமா பிராட்டி விளக்கம் சொன்னார்.

"நான் செய்ய வேண்டிய வேலையை இவர்கள் ஏன் செய்கிறார்கள்?"

"என்னமோ சுவாமி, எனக்கு ஒரே பயமாக இருக்கிறது!"

"பயப்படாதே பிரியே! திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் யாம் என்பதை மறந்து விட்டனை போலும்!"

அதற்குள் நந்தி தேவன் மூர்ச்சை தெளிந்து மெதுவாக எழுந்து வந்தான்.

"என்ன நந்தி தேவா; நீ உடனே போய் நான் அழைத்து வரச் சொன்னதாகப் பிரம்மாவை அழைத்து வா!"

நந்தி தேவன் வணங்கிப் புறப்பட்டான்.

"பார்வதி, எல்லாம் இந்த மானிடர்களுக்கு மூளையைக் கொடுத்திருப்பதால் ஏற்பட்டுள்ள விபரீதம். பிரம்மா வந்தவுடன், இனி படைக்கும் மனிதர்களுக்கு மூளையே இல்லாமல் படைக்கும்படி ஒரு 'ஸ்டாண்டிங் ஆர்டரே' போட்டு விடுகிறேன்"

உமா தேவியின் முகத்தில் புன்னகை அரும்பியது.

"இதோ, விஷ்ணு அண்ணன் வந்து விட்டார்கள்"—விஷ்ணு வருவதைப் பார்த்தவுடனே பார்வதி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்.

"என்ன மைத்துனரே சௌக்கியந்தானே! விஷய மெல்லாம் தெரியுமல்லவா?" — சிவன் கேட்டார்.

"அதை ஏன் கேட்கிறீர்கள். இந்த மனிதர்கள் அணுக்குண்டு பரிசோதனை செய்து கடலையே விஷப்படுத்தி விட்டார்கள். கடலிலேயே சர்வகாலமும் துயிலும் என் உடம்பெல்லாம் பதுப்புது நோய்கள் தோன்ற ஆரம்பித்து விட்டன!"

"போமய்யா போம்! அதெல்லாம் நீர் உம்முடைய கிருஷ்ணவதார காலத்தில் கோபியரோடு செய்த திருவிளையாடலின் விளைவாக இருக்கலாம்..."

"உங்களுக்கு எப்பொழுது பார்த்தாலும் கேலிதான்..."

"அது கிடக்கட்டும்; பிரம்மா எங்கே?"

"அவனையா கேட்கிறீர்கள். நான் வழக்கம் போல் அனந்த சயனத்தில் இருந்தேன். திடீரென்று பெரிய ஓசை கேட்டது. கண் விழித்துப் பார்த்தேன். எங்கும் ஒரே ஒளி, புகை, கொந்தளிப்பு. அப்பப்பா! எனக்கு ஒரே பயமாகப் போய் விட்டது. பிரம்மாவை அழைத்தேன்; பதிலில்லை. என் உதிரத்திலிருந்து முளைத்த தாமரையான அவன் இருப்பிடத்தைப் பார்த்தேன். அங்கே அவனைக் காணவில்லை. குண்டு வெடித்த ஓசையின் அதிர்ச்சியில் பிரம்மா தவறிக் கடலில் விழுந்திருக்கக்கூடும் என்று நினைக்கிறேன்"—விஷ்ணு மூச்சு விடாமல் பேசினார்.

"படைப்புக் கடவுளுக்கே ஆபத்தா?" என்று சிவன் வருத்தப் பட்டார்.

"நான் மச்சாவதாரம் எடுத்துக் கடலில் பிரம்மாவைத் தேடியிருப்பேன். கடலில் அணுக் குண்டுப் பரிசோதனையின் பயனாகக் கடலில் வாழும் உயிரினங்கள் பாதிக்கப் படுகின்றன என்று ஆயிரந்தலை ஆதிசேஷன் சொன்னான். அதற்குப் பின் எனக்கு மச்சாவதாரம் எடுக்க தைரியம் வரவில்லை!"

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது வெளியே எருமை மாடு கனைக்கும் சப்தம் கேட்டது. ஆவலோடு வெளியே பார்த்தார்கள் எமதர்ம ராஜா எருமை மாட்டின் மேல், சித்திரபுத்திரனோடு வந்து கொண்டிருந்தான். சிவனைக் கண்டவுடன் சிகையெல்லாம் ஒடுங்கி கை கட்டி வாய் புதைத்து நின்றான்.

"எமதர்மராஜரே, ஏது இவ்வளவு தூரம்?"—சிவனார் வினவினார்.

"பிரபோ, என் கஷ்டத்திற்கு நீங்கள்தான் முடிவு சொல்லவேண்டும். முன்பெல்லாம் எப்பொழுதாவது ஒருவர், இருவர் இறப்பார்கள். நானே நேரில் போய் உயிரைக் கொண்டு வருவேன், அல்லது என் தூதர்களை அனுப்புவேன். இப்பொழுது இந்த அணுகுண்டு ஹைட்ரஜன் குண்டு கண்டு பிடித்தபின் ஒரே சமயம் பல்லாயிரம் பேர் இறப்பார்கள் போல் தோன்றுகிறது. ஆகவே, என்னுடைய எமதூதர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியது சமூகத்தின் கடமை. அதுவே என் விண்ணப்பம்!"

பிரச்சினை நெருக்கடியான கட்டத்தை அடைந்து விட்டது சிவனார் சிந்தித்தார்.

"அடியேனுக்கு ஒரு விண்ணப்பம்," என்று சித்திரபுத்திரன் பேச்சைத் துவக்கினார்.

சிவன் நிமிர்ந்து பார்த்தார்.

"முன்பெல்லாம் என் கணக்குப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்து ஒரு மனிதனின் ஆயுள் முடிந்து விட்டது என்பதை சரியாகக் கணித்து விடுவேன். ஆனால் இப்பொழுது ஒரு மனிதனின் ஆயுள் முடிகின்ற நேரத்தில் கூட இந்த டாக்டர்கள் பென்சிலின், குளோரோமைசிடின் ஸ்ட்ரெப்டோமைசின், ஆரோமைசின் போன்ற ஏதேதோ மருந்துகளைச் செலுத்தி ஆயுளை நீடித்து விடுகிறார்கள். அது என்னுடைய கணக்கில் உதைக்கிறது" சித்திர புத்திரர் சிரமத்தை விளக்கினார்.

பி.சி.கணேசன்
பி.எஸ்ஸி;பி.டி.

சிவனார் இப்பொழுது சிந்திக்கவில்லை. அவருடைய சிந்தை சுழன்றது. சற்றுநேரம் கழித்துப் புன்முறுவலோடு உமா பிராட்டியைக் கம்பீரமாகப் பார்த்தார்.

"தேவி, நான் சொன்னேனே, இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் முடிவு காண்பது பிரம்மாவின் கையில்தான் இருக்கிறது...மானிடர்களுக்கு மூளை வளர்ந்து நமக்குப் பெரும் அபாயம்! அபாயம்!"—சிவன் உரத்துக் கத்தினார்.

தூரத்தில் நந்தி பிரம்மாவைச் சுமந்து கொண்டு, வயிறு குலுங்க ஓடி வந்தான்.

"இதோ பிரம்மா வந்து விட்டானே!"—விஷ்ணுவின் பற்கள் அத்தனையும் வெளியே தெரிந்தன. பிரம்மாவோ களைப்புடன் காணப் பட்டார்.

"வாரும், வாருங்கள்!" என்று பல குரல்கள் அவரை ஒரு முகமாக வரவேற்றன. கடலில் மூழ்க இருந்த பிரம்மாவை முதுகில் சுமந்து நீந்திக் கரையேற்றிய கதையை நந்தி தேவன் சவிஸ்தாரமாக விளக்கினான். பிரம்மா ஏனோ அதை ரசிக்கவில்லை.

"ஓ பிரம்மா, இனி நீர் மக்களை முட்டாள்களாகப் படைக்க வேண்டும்."—என்று ஆக்ஞாபித்தார் சிவபெருமான்.

"அதுதான் முடியாது. படைப்புத் தொழிலையும் அவர்களே எடுத்துக் கொண்டு விட்டார்கள். யாரோ பெர்ட்ரண்டு ரஸ்ஸலாம்—பெரிய சிந்தனையாளனாம் அவன் எழுதியுள்ள 'கி.பி. இரண்டாயிரம்' என்ற புத்தகத்தில், தற்கால விஞ்ஞான வசதிகளைக் கொண்டு சமுதாயத்திற்கு வேண்டிய அளவில் ஒரு குழந்தையை விஞ்ஞானியாகவோ, தத்துவ ஞானியாகவோ, அரசியல் வாதியாகவோ, வேறு எதுவாகவோ முன் கூட்டியே ஆக்கிவிட முடியும் என்று விஞ்ஞான ஆதாரங்களோடு எழுதியிருக்கிறான்!"

"அப்படியானால் உங்களுக்கு இனி படைப்புத் தொழிலே இருக்காது!" பார்வதி பிரம்மாவைக் கேட்டாள்.

"ஆமாம், அவனுக்குப் படைப்புத் தொழில் இருக்காது. நவீன மருத்துவ வசதியுள்ள நிலையில் எனக்குக் காத்தல் தொழிலும இருக்காது," என்றார் விஷ்ணு.

"அணுகுண்டு யுகத்தில் எனக்கு அழித்தல் தொழிலும் இருக்காது" என்றார் சிவன்.

"ஆமாம், இந்த அறிவு யுகத்தில் உங்களுக்கெல்லாம் வேலையே கிடையாது!" என்றது ஒரு குரல்,

"யாரது?" என்று ஒரே சேரக் குரலெழுப்பி, குரல் வந்த திசையைப் பார்த்தனர்.

"நான்தான் மனிதன்!" என்று கூறி ஒரு மனிதன் கடவுளர்களுக்குக் காட்சியளித்தான்.

"நீ எப்படிக் கைலாயத்திற்கு வந்தாய்?" —சிவன் கேட்டார்.

"ராக்கெட் என்ற கருவி மூலம்" மனிதன் பதில் சொன்னான்.

"அதென்ன ராக்கெட்?" சிவனார் ஆச்சரியத்தோடு கேட்டார்.

"வேகமாகச் செல்லும் இயந்திரம் உங்கள் வாகனமான நந்தியைவிட விஷ்ணுவின் வாகனமான கருடனை விட, எமனின் எருமையை விட..."

"போதும் நிறுத்து!" சிவனின் நெற்றிக்கண் ஜொலித்தது!

மனிதன் பையிலிருந்து ஒரு அணுகுண்டை எடுத்தான். அதை அவன் வீசவில்லை. அதற்கு முன்டாகவே கடவுளர்கள் — முத்தொழிலோர் அங்கிருந்து, மனிதனின் கற்பனையிலிருந்து மறைந்து போனார்கள்! ∴



இது வரையில்...

விடிந்தால் வெள்ளிக்கிழமை! பொழுது விடிந்ததும் தன்னைப் பெண் பார்க்க வருகிற அழகப்பனை கற்பனைக் கண்களால் சுவைத்துக் கொண்டிருக்கிறாள், வேதபுரத்து சிவநேசரின் மகள் சிந்தாமணி. அதி காலையில் தன் தோழிகள் ஆண்டாள் ராதா முதலியோருடன் திருக்குளத்தில் நீராடிக் கொண்டிருக்கிறாள். அப்போது அங்கு டைகர் வருகிறான். ஊரிலே 'மைனர்'ராகிய அவன் சிந்தாமணியை மணம் செய்ய முயன்று தோற்றவன். அவனது விஷமத்தால் அவள் கால் இடறி விழுந்து பிரக்ஞை இழக்கிறாள். உடனடியாக அவளை லேடி டாக்டர் ஆனந்தியின் மருத்துவ மனைக்குக் கொண்டு போகிறார்கள். ஆனந்தி ஊரிலே நல்ல பெயர் எடுத்தவள் தான். ஆனால் பாலகங்காதரத் தேவர் என்பவரின் வலையில் சிக்கி கற்பை இழந்தவள். இப்போது டைகரிடம் ரகசிய நட்பு கொண்டிருக்கிறாள்.

இதற்கிடையில் வேதபுரம்நோக்கி வந்து கொண்டிருந்த மாப்பிள்ளை அழகப்பனும், நண்பன் நயினா முகமதுவும், அன்னை தாயாரம்மாளும் டைகரின் ஆட்களால் தாக்கப்படுகின்றனர். நயினா முகமதுவின் தந்திரத்தால் தப்பி, சிவநேசரின் இல்லம் அடைகிறார்கள்.

ஆனால் சிவநேசரும் மனைவி சிவகாமியும் காலை முதல் தொடர்ந்து அபசகுனங்கள் நிகழ்வதாகச் சொல்லி, மருத்துவ மனைக்குச் சென்று பெண்ணைப் பார்க்க வேண்டாமென்று தடுக்கிறார்கள்; வாதாடுகிறார்கள். ஆனால் அழகப்பனும் நண்பனும் தெரியாமல் மருத்துவ மனைக்குப் போய் விடுகிறார்கள்.

அங்கே டைகரின் சூழ்ச்சித் திட்டம் உச்ச கட்டத்தை அடைந்திருக்கிறது. சிந்தாமணியின் படுக்கையில் அவளுக்குப் பக்கத்தில் சிசு ஒன்று கிடக்கிறது. நர்சு "பிரசவமாகியிருக்கிறது" என்கிறாள்.

அழகப்பன் துடிக்கிறான். சிவநேசரை மனம்போன போக்கில் திட்டி விட்டு, தாயாருடன் காரில் ஊருக்குப் புறப்பட்டு விடுகிறான். அப்போது காரின் முன்னே "நிறுத்துங்கள்" என்று கத்தியபடியே வந்து விழுகிறாள் ஆனந்தி. சிந்தாமணி களங்கமுள்ளவள் என்று பொல்லாங்கு கூறி, பின் மனசாட்சிக்குப் பயந்து, அவளை மாசிலிருந்து மீட்க வேண்டி வந்தவள் தான் விபத்தில் சிக்குகிறாள். அவளை பாலையூர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்கிறார்கள். அங்கும் வந்து விடுகிறான் டைகர். அவன் உள்ளத்தில் சிந்தாமணி மாசற்றவள்; அவள் பக்கத்தில் கிடந்த சிசு ஒரு சூதுப் பொருள், என்ற உண்மையை ஆனந்தி வெளியிட்டு விடக்கூடாதே என்ற பயம் சூழ்ந்து விடுகிறது. ஆகவே சாதுர்யமாகப் பேசுகிறான். சிந்தாமணி தவறியவள்தான்; எனினும் தன்னைப் போன்ற ஒரு பெண் வாழ்விழப்பதை விரும்பாத ஆனந்தியின் பெண் உள்ளம், "சிந்தாமணி புது மலர்" என்று பொய் சொல்லத் துணிந்து விட்டதாகச் சொல்கிறான். நம்புகின்றனர் அழகுவும், நயினா முகமதுவும். ஆனந்தியின் தூய உள்ளத்தைப் புகழ்கிறார்கள். இருவருமே ஒருவருக்கொருவர் வெளியிட்டுக் கொள்ளாமல் ஆனந்தியிடம் மனதைப் பறிகொடுக்கிறார்கள்.

நயினாவையும், தன் அம்மாவையும் பெங்களூருக்கு அனுப்பி விட்டு ஆனந்தியின் அருகிலிருக்க விரும்புகிறான் அழகப்பன். நயினா அழகப்பனை அனுப்பி வைக்க முயற்சிக்கிறான். ஆனால் டைகரோ 'சிந்தாமணி சீந்தக்கூடாத சழி பொருள்' என்ற எண்ணத்தை சுமந்து கொண்டு அந்த மூவரையுமே ஊருக்கு அனுப்பிவிட எண்ணுகிறான்.

8

அழகப்பன் முதலியோர் பெங்களூர் புறப்பட்டு விட்டால், தனக்கு பெரிய சுமை இறங்கியது போல என்று கருதி பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தான டைகர்! இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டு ஆனந்திக்கு இவர்கள் உபச்சாரம் செய்து தொலைக்கிறார்களே ஏன்; சீக்கிரம் போய்த் தொலைய மாட்டார்களா என்றும் முணு முணுத்துக் கொண்டிருந்தான். அவன் மனம் குளிரும் வண்ணம் தாயாரம்மாள் பேச ஆரம்பித்தாள், பெங்களூர் பயணத்தைப் பற்றியதாகவே அவள் பேச்சு இருந்தது. இப்படி ஒரு சந்தர்ப்பத்தை அழகு, நயினா, டைகர் மூவருமே எதிர் பார்த்து இருந்தார்கள். அதைப் பயன் படுத்திக் கொண்டு அழகு, தனது பேச்சிலே சாதுர்யத்தைக் குழைக்க ஆரம்பித்தான்.

"அம்மா மனசு சரியில்லை— இங்கே இருந்தால் இன்னும் குழம்பிக் கொண்டே யிருப்பார்கள். பாவம்; இந்த நயினாவை வேறு அவன் வேலைகளை யெல்லாம் கெடுத்து அழைத்துக் கொண்டு வந்தோம். எப்படியும் நீங்கள் இரண்டு பேரும் பெங்களூர் போய்ச் சேருவதையே நான் விரும்புகிறேன்" என்றான் அழகப்பன்.

பரபரப்புடன் நயினா. "அப்படி யெல்லாம் எனக்கொன்றும் வேலை கெடவில்லையப்பா! இன்னும் பத்து நாளைக்கு வேண்டுமானாலும் இங்கேயே இருக்கிறேன்" என்று பதில் கூறினான்.

"அதற்கில்லை நயினா! அம்மா எப்படியும் ஊருக்குப் போக வேண்டும்... அவர்களுக்கு நம் இருவரில் யாராவது ஒருவர் துணை போக வேண்டும். நான் இரண்டு நாள் இங்கு தங்கி, ஆனந்தியின் உடல் பூரண சுகமானவுடன் புறப்பட்டு வரலாமென்று நினைக்கிறேன்" அழகு சமாளித்தான்.



"பார்த்தீங்களா அம்மா—உங்கள் மகன் பேசுவதை! விடக்கூடாதம்மா இங்கே! அது பெரிய ஆபத்தாக முடியும்! அழகப்பனின் மனம் நிம்மதியில்லாமல் இருப்பது எனக்குத் தெரியும். நம்மை அனுப்பிவிட்டு, எங்காவது போக திட்டம் போட்டிருக்கிறதாகத் தெரிகிறது."

என்று நயினா முகம்மது தாயாரம்மாளிடம் தூபம போட்டான், அவன் பாலையூரில் தங்கி ஆனந்தியின் அன்பைப் பெறலாமென்று திட்டம் போட்டிருக்கிறான். அந்தத் திட்டம் அழகப்பனின் யோசனையால் சிதைந்து விடுமோ என்ற பயம் நயினாவைப் பற்றிக் கொண்டது. அதற்காக என்னென்ன சொல்லி அழகப்பனை பெங்களூருக்கு அனுப்ப முடியுமோ அவைகளை யெல்லாம் சொல்வதென்று முடிவுக்கு வந்தான். தாயாரம்மாளைத் தனியாக அழைத்துப் போய், அழகப்பன் ஏமாற்றத்தால் ஏங்கியிருப்பதாகவும்—அவமானத்தால் அவன் குன்றிப் போய்க் காணப்படுவதாகவும்—அவனையே தனியே விட்டுப் போவது ஏதாவது பயங்கர விளைவுக்கு அஸ்திவாரம் அமைக்குமென்றும் எச்சரிக்கை செய்தான்! தாயாரம்மாளும் நயினா கூறுவதுதான் சரியென்ற தீர்மானத்துக்கு வந்து அழகப்பனைத் தன்கூட பெங்களூருக்குப் புறப்பட வேண்டுமென்று பிடிவாதம் செய்தார்கள். அழகப்பனுக்குத் தாயின் வார்த்தையைத் தட்ட முடியாமற் போய் விட்டது, அவனது ஆசைக் கனவுகள் அருமைத் தோழனால் அழிக்கப் படுகிறதேயென்று தனக்குத்தானே நொந்து கொண்டான். அவனுக்குத் தெரியாது; நயினாவின் உள்ளம் ஆனந்தியின் பாற் சென்றிருக்கிறது என்ற உண்மை! அது போலவே நயினாவுக்கும் அழகப்பனின் ஆனந்திமோகம் தெரிந்திட நியாயமில்லை! வெளியிடவும் ஒருவருக்கொருவர் வெட்கம். விஷயம் சிறிது முற்றிய பிறகு வெளியிடலாமே என்ற எண்ணம்.

அழகப்பனும் தாயாரம்மாளும் பயணத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கத் தொடங்கினர். நயினா இருப்பது கூட டைகருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஒருவேளை ஆனந்தி, உண்மையை நயினாவிடம் கூட சொல்லி விடலாமே என்ற அச்சம்! அதனால் அவன் சற்று அழுத்தந்திருத்தமாகவே, "யாரும் எங்கள் ஆனந்திக்குத் துணை வேண்டியதில்லை. நீங்கள் உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கள்!" என்று கூறினான்! நயினா அதற்குப் பதில் சொல்லவில்லை, விழிகளை அகலமாகத்திறந்தபடி டைகரைப் பார்த்துக் கொண்டே நின்றான்; டைகர், தன்னையறியாமல் தலை குனிந்து கொண்டு ஊமை போல அதைவிட்டு அகன்றான்.

தாயாரம்மாள் ஆனந்தியிடம் வந்து, "கண்ணூ! நான் ஊருக்குப் போய்ட்டு வர்ரேம்மா!" என்று சொல்லிக் கொண்டாள்.

ஆனந்தி பேச முடியாமல், விழிகளாலே அதற்கு சம்மதம் தெரிவித்தாள்.

அழகப்பனும் அவளருகே வந்து "நான்கூட போய் வருகிறேன்' என்றான். ஆனந்தி ஏதோ பேச முயன்றாள் போக வேண்டாமென்று சொல்வதற்கு எண்ணுகிறாள் என்று கற்பனை செய்து கொண்டான் அழகு! அவனை, ஆனந்தி, இமைக்காமல் அப்படியே பார்த்தாள். "நீங்களுமா?" என்பது போல ஒரு முனகல் ஒலி மட்டும் கிளம்பிற்று அவளிடமிருந்து!

உடனே நயினா, "அவர்கள் தான் போகிறார்கள்-நான் இங்கே தான் நாலைந்து நாளைக்கு இருக்கிறேன்!" என்று கூறினான். நயினாவின் பக்கமும் ஆனந்தியின் விழிகள் சுழன்றன. அவள் இதழோரத்தில் புன்னகை ஒன்று மின்னி மறைந்தது. அதற்கு ஏதேதோ புதிய பொருள்களைக் கற்பித்துக் கொண்டார்கள் அழகும், நயினாவும்!

"ஆனந்தி, தன்னிடம் பிரேமை கொண்டு விட்டாள்; அதனால் தான் அவள் நயினாவிடமும் அன்பு காட்டுகிறாள். ராஜா ராணி கதைகளிலே வரும் ராஜ குமாரி

கள் ராஜகுமாரர்களைக் காதலிப்பார்கள்; அந்த ராஜகுமாரர்களது பாங்கர்கள் மீதும் அன்பு செலுத்துவார்கள். அதைப் போன்ற அன்பு, ஆனந்திக்கு நயினு மீது பிறந்திருக்கிறது. இதிலிருந்து அவள் என்னைக்காதலிக்கிறாள் என்பது நிச்சயமாகி விட்டது!''

இப்படிக் கருதிக் களிப்படைந்தான் அழகு. அந்த ஒரு புன்னகை அவன் உள்ளத்திலே அவ்வளவு கற்பனைகளை எழுப்பியது. வானத்திலே சஞ்சரிக்கும் மேகங்கள் காற்றின் மோதுதலால் ஒன்று சேரும் போதும் பிரியும் போதும் ஆகா! இது யானை போலிருக்கிறது; இது பூனை போலிருக்கிறது, என்று கற்பனை செய்வதில்லையா? அது போலவே ஆனந்தியின் இதழ் அசைவுக்கு அழகப்பன், புதுப்புது அர்த்தங்களை தனக்குள்ளாகவே படைப்பித்துக் கொண்டான். நயினு முகம்மது அந்தப் புன்னகையிலே போதை தலைக்கேறியவனாய் நின்றான். இறுதியில் அழகப்பன்பிரிய முடியாமல் அந்த இடத்தை விட்டுப் பிரிந்து, தாயாரம்மாளுடன் காரில் ஏறி உட்கார்ந்தான். நயினு முகம்மது அவர்களை வழியனுப்பி விட்டு டைகருடன் மருத்துவ மனைக்குத் திரும்பினான். ஆனந்தி படுத்திருக்கும் கட்டிலுக்கு சிறிது தூரத்தில் ஒரு நாற்காலியைத் தூக்கிப் போட்டுக் கொண்டு நயினு உட்கார்ந்து கொண்டான், அவனை எப்படியாவது அங்கிருந்து துரத்தி விட வேண்டும் என்று துடியாய்த் துடித்தான் டைகர். தான் மட்டுமே ஆனந்திக்கு வேண்டியவன் என்றும், நயினு ஆனந்திக்குத் தெரியாதவனென்றும் — அதனால் அவன் இங்கிருக்கத் தேவையில்லை யென்றும்— டாக்டர்களிடம் சொல்லி அவனைத் துரத்திவிடலாமா என்று யோசித்தான். அப்படிச் சொல்லும் போது ஒரு வேளை, ஆனந்தியே தனக்கு எதிர்ப்பாக இருந்து விட்டால்...என்ன செய்வது என்ற அச்சமும் பிறந்தது! செய்வதறியாது விழித்தான் டைகர்! பிறகு, நயினுவிடம்...''நீங்கள் தான் இங்கு இருக்கிறீர்களே; ஆனந்தியைப் பார்த்துக் கொள்ளுங்கள்! நான் காலையில் வருகிறேன்'' என்று கூறிவிட்டு பாலையூர் மருத்து மனையிலிருந்தும் வேகமாகப் புறப்பட்டான்! பயங்கரமான திட்டமொன்றுக்கான அடித்தளம் அவன் நெஞ்சப்படு குழியில் அமைவதை அவனது முகம் எடுத்துக் காட்டிற்று!

மாலைச் சூரியன் மேற்றிசையிலிருந்து பொன்னிறக் கதிர்களை மருத்துமனைப் பலகணி வழியாக ஆனந்தியின் மீது கொட்டினான். அந்த மஞ்சள் நிற வெய்யிலிலே ஆனந்தியின் மந்தகாச முகம் ஒளி சிந்திக் கொண்டிருந்தது. ஆனந்தி, லேசாகக் கண்களைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தாள். ''உடனே நயினு அவளருகே ஓடி என்ன வேண்டும் என்று கேட்டான். ஆனந்திக்குப் பேச இயலவில்லை. இதழ்களை அசைத்தாள். நயினு யூகமாக 'ஹார்லிக்ஸா' என்று வினவினான். அவளது சுந்தர விழிகள் ஆமோதிப்பது போல் அசைந்தன. அவசர அவசரமாக 'ஹார்லிக்ஸ்' தயாரிக்கத் தொடங்கினான். தயாரிக்கும் போதே இன்ப நினைவுகள்! 'ஹார்லிக்சை' நாம் தானே அவளுக்குத் தர வேண்டும்—ஆகா—எவ்வளவு அருமையான வாய்ப்பு! ஹார்லிக்ஸ் குவளையை அவள் இதழ் அருகே நீட்டும் போது; என் விழிகளும் சந்திக்குமல்லவா?

இது வரை சந்தித்ததுபோலில்லாமல் அந்த சந்திப்பில் ஒரு நெருக்கம் இருக்குமல்லவா? நினைக்கவே இனித்தது நெஞ்சம். ஹார்லிக்சை எடுத்துக் கொண்டு எழுந்தான் நயினு!... அந்தோ, அவனது எண்ணக் கோட்டை தவிடுபொடியாகி விட்டது...நர்ஸ் வேகமாக வந்து கொண்டே, ''என்ன ஹார்லிக்ஸா?'' எனக் கேட்டபடி அவன் கையிலேயிருந்த குவளையை வாங்கி ஆனந்தியிடம் திரும்பினாள். நர்ஸ் குறுக்கீடு நயினுவை மரம்போலச் செய்து விட்டது. வெப்பத்தையும் வேதனையையும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவன் பழையபடி உட்கார்ந்து கொண்டான். ஆனந்திக்கு வேண்டிய வசதிகளை செய்து விட்டு, நர்சு அதை விட்டு அகன்றாள். இனி அடுத்த சந்தர்ப்பம் எப்போது கிடைக்குமென்றுஎதிர்பார்த்தபடி நயினு உட்கார்ந்திருந்தான்,

★

சிந்தாமணி மாசற்ற மாணிக்கம், களங்கமற்ற நிலவு என்றெல்லாம் சீராட்டிப் பாராட்டி வளர்த்த சிவ நேசரும், சிவகாமியும் எரிமலையின் தீக்குழம்பால் தாக்குண்டது போல துடித்துத் தேம்பி அழுதனர். தெய்வமே துணையென்று இருப்பவள் சிவகாமி. அவனன்றி ஓரணுவும் அசையாது என்று அழுத்தமாக நம்பிக்கிடப்பவர் சிவநேசர்! அவனையுமறியாமல் இந்த அக்கிரம அசைவு எப்படி ஏற்பட்டது என்று அவருக்கே புரியவில்லை! பூமி அசைவுகளையும்-பூகம்ப அதிர்ச்சிகளையும்—பூவோடும் பிஞ்சோடும் குடும்பங்கள் புயல்காற்றில் சிக்கி மடிவதையும், கடற் கொந்தளிப்பில் நாடு நகரங்கள் நாசமாவதையும் அமைதியோடு பார்த்துக் கொண்டிருக்கிற ''ஆண்டவன்'' சிவநேசர் குடும்பத்தில் ஏற்பட்ட சிறு கொந்தளிப்பு கண்டா அதிர்ச்சி அடைந்து விடப் போகிறான்! கற்பை விற்று, உடலை விலை கூறி, உல்லாசிகளுடன் தேகத்தை உராசிக் காசு பெறும் ''உத்தமி''களை உலவவிட்டு வேடிக்கை பார்க்கும் ''ஆண்டவன்'' சிந்தாமணியின் மீது ஏற்பட்ட களங்கத்தைத் துடைப்பதற்கு ஓடோடியும் வர வேண்டுமா என்ன? பாவம்; பைத்தியக்கார சிவநேசர்; இந்தச் சிக்கலுக்கு சிவனார் வழி காட்டுவார் என்று பரிபூரணமாக நம்பினார்!

நல்ல வேளை, சிந்தாமணியை சோதிக்க சிவனார் வராமல் இருந்தாரே என்று சந்தோஷப்பட்டிருக்க வேண்டும் சிவநேசர்! மாறாக வருத்தமுற்றார்; இன்னும் ஆண்டவன் அருள்பாலிக்கவில்லையே என்று! சிவகாமியோ, கணவனின் காலில் விழுந்து கதறி அழுது. ''வாருங்கள் ஆஸ்பத்ரியில் போய் சிந்தாமணியைப் பார்த்து வரலாம். விபரமெல்லாம் புரியும்!'' என்று கூறினாள்.

''நான் கடவுளைத்தான் நம்பியிருக்கிறேன். அவர்தான் என் கஷ்டத்தைப் போக்க வேண்டும்! தெய்வமே! மானமாக வாழ்ந்தவன் இந்த சிவநேசன்—எனக்கு இப்படி ஒரு அபவாதம் வரலாமா? நான் யாருக்கு என்ன தீமை செய்தேன்?'' என்று ஓவென அலற ஆரம்பித்தார் சிவநேசர். சிவகாமி, அவரைப் பிடிவாதமாக அழைத்துக் கொண்டு, மருத்துமனைக்குப் புறப்பட்டாள்! ''சிந்தாமணியைப் பார்த்தால் எல்லாம் புரிந்துவிடும், கவலைப்படாமல் வாருங்கள்!' இந்த மாப்பிள்ளை போனால் வேறு மாப்பிள்ளை!'' என்று கணவனுக்கு ஆறுதல் கூறினாள்.

''மாப்பிள்ளை போனால் பரவாயில்லை சிவகாமி! மானமல்லவா போய்விட்டது!'' என்று கதறினார் அவர்.

''ஏன் போகிறது மானம்? எவனோ ஒருத்தன் உளறினான் என்பதற்காக தங்கம் பித்தளையாகி விடுமா?'' என்று சிவகாமி, ஆத்திரத்தோடு பேசினாள். இருவரும், ஆனந்தியின் மருத்துவமனைக்குள் நுழைந்தார்கள். வாயிற் புறத்தில் யாருமில்லை. ஆனந்தி, விபத்துக்களாகிப் பாலையூர் சென்று விட்டதால் மருத்துவமனை வெறிச்சென்று காணப்பட்டது. வழக்கமாக வரவேற்கும் வேம்புவைக்கூட காணவில்லை. நர்ஸ் ஒருத்தி மட்டும் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறு தூங்கிக் கொண்டிருந்தாள். சிவகாமி, சிந்தாமணி படுத்திருந்த கட்டிலண்டை வேகமாகப் போனாள். அங்கே சிந்தாமணி காணப்படவில்லை. தூங்கிக் கொண்டிருந்த நர்சை எழுப்பி, ''எங்கே சிந்தாமணி?'' என்று கேட்டாள்!

''அய்யோ எனக்குத் தெரியாதே! நான் ரொம்ப நாழிகையாக தூங்குகிறேன்'' என்றாள் அந்தக் கடமை புரியும் காரிகை!

மருத்துவமனை முழுவதும் தேடியாகி விட்டது. சிந்தாமணி, காணப்படவில்லை! மற்ற நோயாளிகளும் தங்களுக்குத் தெரியாது என்று கூறினார்களே தவிர, விபரம் அறிந்தவர்களாக யாருமில்லை. சிவகாமி ''சிந்தாமணி! சிந்தாமணீ!!'' என்று பெருங் கூச்சலிட்டுக் கத்தினாள்! வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு மருத்துவ மனையிலே உருண்டாள்! சிவநேசர் அமைதியாக அப்படியே உட்கார்ந்திருந்தார். நீண்ட நேரம் அவர் பேசவே இல்லை! பிறகு மெதுவாக சிரித்தார்! ''என்ன இது?'' என்றாள் அதிர்ச்சியோடு, சிவகாமி! அவர் கலகலவென சிரித்தார்!...

(தொடரும்.)

இலக்கியத்தில் நாம்

மாலை மயக்கம், சோலை வனக் கிளிகளின் சுந்தரக்கூச்சல், சந்தன மணம் தூக்கி வரும் தென்றல், அது பாடும் தெம்மாங்கு எம்மருங்கும் இன்பத்தைத் தூண்டிவிடும் மந்தகாச சூழ்நிலை. அதோ செவ்வானம், சிங்காரியின் தேன் இதழை நினைவு படுத்துவதுபோல: நில மடந்தையின் நேத்திர ஒளியிலே மயங்கி விட்டான் கதிர்காதலன். சினம் கொண்ட பாம்புகளைப் போல— அதோ! அதோ! அந்தி வானத்தின் தேக காந்தியைக் கட்டிப் புரள்கிறான் கதிரவன்.

கமலம் இந்தக் காட்சியைக் கண்டாள், தன இதய ராஜா இருடி ஒருத்தியின் இன்ப ரச பானத்தில் மயங்கிப் போனான். அந்த வரிவிழியாளின் கை வலை விலேகட்டுண்ட நாகம் போல, புரண்டு கிடக்கும் கொடுமை கண்டு, கொதித்தாள், கோதை நெஞ்சம் பதைத்தாள்! கூடிகெடுத்தாளே! குல விளக்கை அணைத்தாளே! என்று குமுறினாள். இதழ் கரத்தால் முகம்மூடி தடாகத்து நீரிலே உடல் மறைத்து வாடி நின்றாள், இன்னல் ஓரிடம், இன்பம் வேறிடம், இயற்கைதானே!

வண்டு வாய் திறக்க-வண்ண மலர் சிரிக்க, நித்திலத் தோட்டத்தில் நெடு நிலா பிறக்க, அமுத இதழ்விரித்து—அழ கொழுகும் முகம் செழிக்க மகிழ்ந்திருந்தாள் அல்லி எனும் மலருடலாள்! சில மணித்துளிகளில் இயற்கை தீட்டிக்காட்டிய இந்த இரண்டு காட்சிகளைக் கண்டனர் கரையிலே நின்ற கட்டழகனும், கட்டாணி முத்தழகியும்.

கமலமும், அல்லியும் மலர்கள் தான். நிலவும், கதிரவனும் இயற்கையின் வாரிசு. ஒன்றோடு ஒன்று உயிரோடு உயிராய், உணர்வோடு உணர்வாய் மோகச் சங்கிலியால் பிணைந்து வாழும் காட்சி தான் என்ன காட்சி! என்றனர்;

★

'கவிதை செய்யும் புலவன், கலை சமைக்கும் கலைஞன், கற்பனைக்கோர் ஆலவட்டம் இந்த அற்புதக்காட்சி; அப்படித்தானே அத்தான்!' என்றாள் அவன் தோள் பற்றி, தோகை மயில்போல் அவனருகே நின்ற அதர அழகி; அங்கையற்கண்ணி!

'கவிதையும், கலையும் அங்கென்ன வாழ்கிறதாம்!' என்று கூறிவிட்டு கோதையவள் முகம் பார்த்து நின்றான் அக்குறும்புக் காரன்!'

'கலை இங்கில்லையா? கற்பனை எழ வில்லையா? வெள்ளிப் பிறை நிலவும், தாரகைத் தோட்டமும், உணர்ச்சியைக் கிளர வில்லையா? கலை ஊற்றெடுக்க வில்லையா? சொல்லுங்கள் அத்தான்!'' என்றாள் மீண்டும் அக்காவி விழி மங்கை,

'உலகத்தின் பெருங் கதையே நீ தானே! கலையும், கற்பனையும்— கண்ணே! என் கற்பகமே! உன் கண்ணொளியில், கற்கண்டு செவ்விதழில், கன்னங்களில், கனி மொழியில், பனிப் பார்வையில், நெஞ்சத்தை சூறையாடும் உன் நிலாத்துண்டு நெற்றியில்தான் காணகிறேன்! களிப்பால் உடம்பெல்லாம் உயிரெல்லாம் நனைகிறேன், என்றான் அங்நெடுந் தோளன்.

புகழ் மழை, அத்தான் உதிர்த்திட்ட போதை மொழி, புது சுகங் கண்டாள் பூவை! உடலெல்லாம் உயிர் அணு வெல்லாம் புல்லரித்து நின்றாள். அத்திங்கள் முகத்தழகியின் சிற்றிடை துவண்டது, தித்திக்கும் இதழ்களில் முத்துநகை புரண்டது, சித்திர விழி வேல் உருண்டது, அவன் பார்த்தான், அவளும் பார்த்தாள். அல்லியும் நிலவும், கமலமும் கதிரவனும் போல!

'அவள் நிலாமுகத்தை தளிர்க் கரங்களால் அன்போடு அணைத்துப் பிடித்தான்.

'கனகமணிச் சிலையே! கலை எங்கே இருக்கிறது இப்பொழுது பார்?' என்றான் அவள்மேல் பார்வையைச் செலுத்தியபடி!

'இங்குதான் அத்தான்...!' அதற்குமேல் பேச்சில்லை; லேசான பெரு மூச்சு! அவள் இதழ்கள் துடித்தன; தென் காற்று தாலாட்டும் மென் கொடி போல் அவன் தோள்களிலே சாய்ந்தாள், அதிலே சந்தோஷம் கண்டாள், இந்த இன்பத்தை நாம் ஏன் குலைக்க வேண்டும்; என்ற எண்ணமோ என்னவோ, மேகத்துகில் எடுத்து முகம் மறைத்துக்கொண்டது உச்சி வானத்து வெண்ணிலா!

அந்த இன்பத்திற்குப் பிறகு பல நாள் வரை தலைவனும், அத்தமிழகத்துக் கிளியும் சந்திக்கவே யில்லை.

அன்றிரவு கார்காலத்திற்குள் திரும்பி வருகிறேன் என்று பிரியா விடை பெற்று, அலுவல் காரணமாக வெளியூர் சென்ற தலைவன் திரும்பவில்லை, கார் காலமோ வந்து விட்டது. மழை தந்த வளத்தால், முல்லைக் கொடிகள் செழித்து சிங்கார மலர் கொழித்து நின்றன.

சேல் விழியாளோ தன் சிந்தையிலே பதிந்து விட்ட சித்திரத்தின் வருகைக்காக வழி மேல் வைத்த விழி எடுக்காமல் அந்த சோலையிலே காத்திருந்தாள், நெஞ்சம் அலைமோத, நெடுங் கண்ணீர் வடித்து நின்றாள், அவள் நிலா முகத்தில் துயர மேகங்கள் சூழ்நது கொண்டன. நிலவு காணா அல்லி போல, கதிர் காதலனைப் பிரிந்த தாமரை போல தளிர்க் கொடியாள் தவித்தாள்.

'ஏனடி பேதாய்! எற்றுக்கு இந்த வாட்டம்.'

'மூடடி வாயை; மூண்டெழும் என் இதய வேதனையில் எரி தணலை வாரிக் கொட்டாதே!'

முத்துப்பல் தெரியக் காட்டி கலகலவென்று சிரித்தன, கொடியிலே கூத்தாடும் அம்முல்லை மலர்கள்! தன் தனிமையை எண்ணி அப்படி அம்முல்லை மலர்கள் நகையாடுவது போல உணர்ந்தாள் அந்நங்கை.

'கார்காலமோ வந்து விட்டது, காதலனைக் காணோமே' இப்படி அந்தத் தோட்டத்து மலர்களெல்லாம் அவளைக் கேட்டுக் கேட்டு கேலி பேசுவது போல உணர்ந்தாள்,

கதிரவனைப் பிரிந்த தாமரையின் தவிப்பிலே கலையைக் கண்டவள். தன் காதலனின் பிரிவால் தனக்கேற்பட்ட தவிப்பிலே, கண்ணீர் வடிக்கிறாள்! சூழ்ந்திருக்கும் முல்லைத் தோட்டம் சூனிய வெளியாக அவளுக்குத் தோற்ற மளிக்கிறது. தன்னைக் கேலி பேசும் முல்லை மலர்களைக் கண்டு, சீறினாள். என்றாலும், அம்மலர்களின் மென்மையும், ஏடவிழா சிறுசிறு அரும்புகள் முத்தென ஒளி சிந்தும் தன்மையும் கண்டு சீற்றம் தணிந்து, 'நியாயமோ தோழி? நான்படும் வேதனை கண்டு நகையாடுகிறாயே' என்ற பாணியில் 'என் துயர் கண்டு மனம் இளக வில்லையோ' என்கிறாள், அம்மலரினும் மென்மையான இதயம் படைத்த அம்மறக்குல மங்கை.

கதிரவன் பிரிவால் வாடும் கமலம், நிலவின் பிரிவால் வாடும் அல்லி, காதலன் பிரிவால் வாடும் காரிகை; இம்மூன்று நிகழ்ச்சிகளையும் முல்லைச் சரமாக்கி, சிரிக்கும் அல்லி, சிங்காரத் தாமரை, சேல் விழி மங்கை, மூன்றுமே சிறு துன்பத்தாலும் வாடிடும் மென்மையான பொருள்கள் என்றோ? என்ற சொற் சித்திரத்தை விளக்கும் 'குறுந்தொகை' வரிகள்.

அவை—இவை!

'' முல்லை வாழியோ முல்லை நீநின்
சிறு வெண் முகையின்
முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியோர்
மாட்டே.''

-வில்வம்

உண்மை - உடம்பெரிச்சல்!

சில ஆண்டுகளுக்கு முன்னால் நியூயார்க் நீதிமன்றத்தில் விசித்திரமான வழக்கொனறு வந்தது. பல ஆண்டுகளுக்கு முன்னால் உலகப் பெரும்புலவன் ஷேக்ஸ் பியர் தீட்டிய 'வெனிஸ் நகரத்து வாணிசன்' என்ற கதை பற்றிய வழக்கு அது; கதையிலே வருகிற ஷைலக என்ற யூதன்; கொடியவனாகவும், இரக்க சிந்தையற்றவனாகவும்; ரத்த வெறி கொண்ட பேராசைக் காரனாகவும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தான் ஆசிரியரால். '' யூத இனத்தை சேர்ந்த ஒருவனை, கொடியவனாக ஷேக்ஸ்பியர் அறிமுகப்படுத்தியிருப்பது; யூத இனத்தின் மீது மக்களை வெறுப்படையச் செய்கின்ற பிரசாரமாகும்; வகுப்புவெறியைத் தூண்டிவிட்டு, ஒரு இனத்தின் மேல் மற்றொரு இனத்தை மோத விடுகின்ற அராகஜத்தை உறுவாக்குகின்ற வெறிச் செயல்; எனவே இதை தடைபடுத்த வேண்டும் '' இப்படி வழக்கொன்று; யூத இனத்தின் முன்னோடிகள் சிலரால் தொடரப்பட்டது;

'' இன்றுள்ள நிலையைத்தான் ஷேக்ஸ்பியர் சித்தரித்திருக்கிறார். மேலும் அது வரலாற்று உண்மை, அதை தடை செய்ய அரசுக்கோ அன்றி எங்களுககோ உரிமை இல்லை,''

அந்த விசித்திர வழக்கிற்கு நீதிபதி சொன்ன பதில் இது,

'' வரலாற்று அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு எதிராக வெறுப்பைத் தூண்டும் பிரச்சாரத்தை தி. க. தி. மு. க.கள் செய்து வருகின்றன. இந்த பிரசாரம் ராஜ துரோகத்தைவிட கொடியதாகும், இந்த 'வெறுப்பை வளர்க்கும் பிரசாரத்தை' சர்க்கார் உடனடியாக தலையிட்டு தடுக்காவிட்டால் எதிர் காலத்தில் 'அராகஜம்' ஏற்பட்டு விடும்.'' [ஆச்சாரியார்.] (தமிழ் நாடு 13—6—56)

அன்று; அங்கே யூதர்களின் முன்னோடிகள்; நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள்; 'உள்ள நிலைதானே, உங்களுக்கேன் உடம்பெறிச்சல்' என்ற விதத்தில் அங்கே கசையடி தந்திருக்கிறார்; வழக்காடச் சென்ற வணகனாளர்களுக்கு; இங்கே 'ஆரியகுலக் காவலர் ஆச்சாரியார் அலறிப்புடைக்கிறார்; அங்கலாய்த்துக் கொள்ளுகிறார்; அரசாங்கம் தடை செய்ய வேண்டுமாம் அறிவியக்க பிரசாரங்களை! நியூயார்க் நீதிபதியின் அதே வாசகங்களைத்தான் இங்கே ஆச்சாரியாருக்கு காணிக்கையாக்க விரும்புகிறோம். யூதமும்—ஆரியமும்; வரலாற்றின் அனாதைகள்!

இதைப் புரிந்து கொண்டும்; மறைக்கப் பார்க்கிறார்; மழுப்பிக் கொட்டுகிறார்; 'பாவம்; வாழ்ந்து கெட்டவர்' இதைத் தவிர; வேறெதைச் சொல்லி நம்மால் அனுதாபப்பட முடியும்?

பேனோவியம்

தொல்லை அவருக்குத் தூசு!

பிறைக் கொடி ஏந்தியோர் நரை முடிக் கிழவரை மீண்டும் கைது செய்திருக்கின்றனர்!

ஆமாம்; எல்லைப்புர காந்தி என்று எல்லோராலும் பிரிய முடன் அழைக்கப்பட்டு வரும் கான் அப்துல் கபர்கானை வைத்து மேற்கு பாகிஸ்தான் சிறைக்கோட்டம் பூட்டப்பட்டிருக்கிறது.

அவர் பிறந்து, வளர்ந்து தவழ்ந்த சொந்த வீட்டிற்குக் கூட அவ்வளவு அதிகமாக போய் வந்திருக்க மாட்டார்; ஆனால் சிறைச்சாலைக்கு அவர் சென்று வந்ததோ பல முறை! நினைவில் வைப்பதற்குக்கூட கஷ்டமாயிருக்கும்-அவ்வளவு தடவைகள் அவர் தடை இடரி, அரசியல் கடை விரித்து பிழைப்பு நடத்தும் கடைக் குணம் கொண்டோரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்!

சென்னை மிருகக் காட்சி சாலையிலே நெல்சன் என்றொரு ஆண் சிங்கம். அது பிறந்ததும் கூண்டுக்குள்ளேதான்! இப்போது வளர்ந்து, அங்குமிங்கும் நடந்து கொண்டிருப்பதும் கூண்டுக்குள்ளேதான்! "காடென்றால் இதை விடப் பெரிய கூண்டாக இருக்குமோ?"—என்பதைப் போல அது அடிக்கடி மனிதர்களைப் பார்க்கும். அதைப் போன்றவர்தான் கபர்கான்! தன் வயோதிகப் பருவத்தின் பெரும் பகுதியை அவர் கூண்டிற்குள்ளேயே கழித்து விட்டார்!

சிறை என்றதும் தொடை நடுங்கும் இனமல்ல; போலீஸ்காரர்களைக் கண்டதும் 'குய்யோ முறையோ' என்று கதறியழும் வர்க்கமல்ல; சட்டத்தின் கண்களிலே மண்ணைத் தூவிவிட்டு மறைந்து வாழ்ந்து மாவீரர் பட்டத்தைத் தேடிக் கொண்டவருமல்ல அவர்!—

சிறைச்சாலையைச் சித்திரப் பூச்சாலையாக நினைத்து நடை போடுபவர்!

நளிர் மணி நீரும், நயம்படு கனிகளும், குளிர் பூந் தென்றலும், கொழும் பொழிற் பசுமையும் காணாமல் அவரது கண்கள் இருட்டறையில் பல ஆண்டுகள் சுழன்றுகொண்டே இருந்திருக்கின்றன!

—இந்தத் தடவை அவருக்கு ஏற்பட்டிருக்கும் சிறை புகு படலத்திலே ஒரு சிறு மாற்றம்!

அவரைக் கைது செய்ய உத்தரவிட்டவர் அவருடைய அண்ணன்; மேற்கு பாகிஸ்தான் பிரதமர்! கான்சாகிப்;

அண்ணனின் ஆட்சியிலே தம்பி ஒரு காவற் கைதி!

அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்களும் சாமான்யமானவைகளல்ல!

மக்களிடையே துவேஷ உணர்வுக்கு வித்திட்டு வளர்த்தாராம்; சட்ட பூர்வமாக அமைத்திருக்கும் ஆட்சிக்கு அவமதிப்பு தேட முனைந்தாராம்; தேசத்துக்கே துரோகம் செய்ய முனைந்தாராம்—

என்ன அப்படி தேசத் துரோகம் செய்திருக்கிறார் தெரியுமா?



கான் அப்துல் கபர்கான்.

சாதாரண கண் கொண்டு பார்த்தால் குற்றச்சாட்டு தெரியாது. இதோ! கொஞ்சம் 'ஏகாதிபத்திய பூதக் கண்ணாடியை' போட்டுக் கொண்டு பாருங்கள்—

பட்டாணியர்களையே முழுக்க, முழுக்கக் கொண்டிருக்கும் தனது மாகாணம் 'பக்டூனிஸ்தான்' என்னும் பெயரில் தனி நாடாக வாழ வேண்டுமென்று கேட்கிறார், கபார்கான்!

பட்டாணியர்கள் தனி இனமாம்; அவர்கள் பாகிஸ்தானத்துக்குக் கீழே அடங்கி நடக்க மாட்டார்களாம்!

தனி நாடு தராவிடில் போராட்டம் துவங்குவார்களாம்!

—இப்படி ஒரு இயக்கத்திற்கு கபர்கான் தலைமை வகித்தால் எந்த ஏகாதிபத்திய வெறி கொண்ட அண்ணன் தான் சும்மாயிருப்பான்?

ஆட்சிபீடம் அவர் கையிலே; எனவே அடைத்து விட்டார் சிறைக் கோட்டத்தில்!

பட்டாணியர்கள்—அவர்களும் முகமதிய மதத்தைச் சார்ந்தவர்கள் தான்; ஏனைய பாகிஸ்தானிகளைப் போல!

—இருந்தும் மத ஒற்றுமை நாட்டுப் பிரிவினையைத் தடுக்க முடியவில்லை!

"இந்து மதக் கயிற்றால் பாரத மாதா நம்மைக் கட்டியிருக்கிறாள்; பாவிகாள்! அதிலிருந்தா நீங்கள் பிரிந்து செல்ல நினைக்கிறீர்கள்?"—என்று விடுதலைப் படை நடத்தும் திராவிடர் இயக்கத்தைப் பார்த்துக் கேட்பவர்கள் பக்டூனிஸ்தான் பக்கம் தங்கள் பார்வையைத் திருப்பட்டும்!

பாகிஸ்தான் இன்றில்லாவிட்டால் நாளை பக்டூனிஸ்தானைப் பிரித்துக் கொடுக்கப் போகிறது! அதற்கான சூழ்நிலைகள் அங்கே உருவாகிக் கொண்டிருக்கின்றன.

இந்துஸ்தானமும் அப்படித்தான்; நாளை நாம் கேட்கும் 'திராவிடஸ்தான்' என்கிற 'திராவிடநாடு' பிரியாவிட்டால் ஆயிரமாயிரவர்கள் கபர்கானாக மாறி ஆயுள் முழுதையும் அடிமை பூமியில் கழிப்பதைவிட வெஞ்சிறையில் வாடுவதே மேல் என்ற நோக்குடன் வீறு பெறுவர்; ஏறு நடை போடுவர்; எதிர்த்தோரை இலட்சியத்தால் கூறு போடுவர்! இடையிலே விழி மூடினும் அதுவே யாம் பெற்ற பேறு—எனக் கொள்வர், அந்த நல்ல கொள்கையாளர்!

THE BEST POSTAL TUTORIAL COLLEGE TIRUCHI

அஞ்சல் மூலம் கல்விப் பயிற்சி

'பி' பிரிவு வகுப்பு துவக்க நாள்

10-7-56

1957 மார்ச்சு, ஏப்ரல் தேர்வுகளுக்கும் 1956 அக்டோபர், செப்டம்பர் தேர்வுகளுக்கும் பாடங்கள் அனுப்பப்படும் வகுப்புகள்.

1. அடிப்படை ஆங்கிலம்
2. இ. எஸ். எல். சி,
3. எஸ். எஸ். எல். சி.
4. மெட்ரிகுலேசன் (சென்னை.)
5. இண்டர் (சென்னை) (முதல்இரண்டு பாகங்கள்மட்டும்)
6. புகு முகத் தேர்வு
7. புக் கீப்பிங்
8. ஹோமியோபதி
9. கைத்தறி நெசவு
10. விவசாயம்

2 ஒரு அணா ஸ்டாம்புகளுடன் உடனே விண்ணப்பியுங்கள்,

ஏ. ராதாகிருஷ்ணன் (நிர்வாகி)

அஞ்சல் முறைக் கல்விப் பயிற்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-2.

உலக அமைதி

★ 2 ம் பக்கத் தொடர்ச்சி

யைப் பார்த்து அமெரிக்கா மயங்கியுள்ளதாகக் கூறுகின்றனர்! விபசாரியின் ஆசைக்குக் காரணம் சீமானின் சுந்தர ரூபம் என்பதுபோல் வாதாடுகின்றனர்! வார்த்தை வீரர்கள்!' உண்மையில் சுந்தர ரூபமல்ல காரணம்...சீமானின் பொன்ன மாளிகைதான் என்பதை மறந்து விடுகின்றனர்! அமெரிக்கா அளித்ததன் காரணம் இந்தியாவை தன் அடிமையாக்க!...அமெரிக்கா அலகாபாத் கோமானிடம் டாலரைத் தந்தது! பாகிஸ்தானிடம் தோட்டாக்களைத் தந்தது! நேரு தடுத்தும் அமெரிக்கா நிறுத்தவில்லை ஏன்? கடன் வாங்கியவன் பக்கத்தில் தண்டல் வசூலுக்கு தடியேந்தியவனை நிறுத்தும் முதலாளியைப் போல அமெரிக்கா பாகிஸ்தானிடம் துப்பாக்கியைத் தந்து வைத்துள்ளது!

இந்தியா பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் ஒரு அங்கம் வகிக்கிறது! ஆனால் இந்தியாவுக்கு எதிரிடையாக 'பாக்தாத் ஒப்பந்தம்' என்று ஒன்றை பிரிட்டன் ஏற்படுத்தியுள்ளது. பண்டிதரின் வெளிநாட்டுக் கொள்கைகள் வெற்றி பெற்றுள்ளதாகக்கூறும் காங்கிரஸ்காரர்களையும் கேட்கிறேன்! இவைகள்தான் வெற்றியின் அறிகுறியா?

நேருதான் உலக அமைதியைக் காப்பதாக காந்தி சீடர்கள் கூறுகின்றனர்! ஊர் அமைதியைக் காக்க இயலாதவர் உலக அமைதியை எப்படிக் காக்கப் போகிறார்!

அல்ஜீரியா விடுதலை பெற வேண்டுமென்கிறார் பண்டிதர்!

திராவிடம் அடிமையாய் இருக்க வேண்டுமென்கிறார்!

'சைப்ரஸ்' தீவு விடுவிக்கப் பட வேண்டுமென்கிறார் நேரு!

நாகர்களை விட முடியாது என்கிறார்!

தென் கொரியா வட கொரியாவுக்குத்தான் சொந்த மென்கிறார்! ஆனால் தேவிகுளம், பீர்மேடு தமிழர்களுக்கு இல்லை யென்கிறார்!

வட வியட்நாமோடு தென் வியட்நாம் சேரத்தான் வேண்டுமென்கிறார்! ஆனால் பம்பாயை மகாராஷ்டிரத்தோடு சேர்க்க முடியா தென்கிறார்!

இத்தகைய முரணான கொள்கைகளைக் கொண்டுள்ள பண்டிதரால் உலக அமைதி நிலவும் என்ற நம்பிக்கை நமக்கில்லை!

உண்மையில் உலகஅமைதி நிலவ வேண்டுமாயின் அணு குண்டுகளை அழித்தொழிக்க வேண்டும்! ஆச்சாரியார் சொல்லியதைப் போல கடலில் போடச் சொல்லவில்லை! கடற்கனிகளின் ருசியை அறியாதவர் அவர்! அணுகுண்டு ஆராய்ச்சி சாலைகளையே அழித் தொழிக்க வேண்டும்!

வட வியட்நாம் தலைவன் ஹோசிமின் கொள்கை வெற்றி பெறு விட்டால், சிங்கப்பூரின் தலைவன் மார்ஷலின் முயற்சி பலன் தராது போனால், நாகநாட்டின் விடுதலை வீரன் பீசோவின் போசனை ஏற்றுக் கொள்ளப்படா விட்டால், சைப்ரஸ் தீவின் போராட்டத் தலைவன் மக்ரியாஸ் வாகை சூடா விட்டால், அல்ஜீரியாவின் சுதந்திரம் கோரும் 'பெர்ஹென்ட் அபாஸ்' ஆசை ஈடேறா விட்டால், கொரியாவும், ஜெர்மனியும் இணையா விட்டால், திராவிடர்களின் தலைவர் அறிஞர் அண்ணாவின் அரசியல் கொள்கை வெற்றி பெறுவிட்டால்; உலக அமைதி நிலவாது, நிலவாது! நிலவாது என்று கூறி என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

★

பின்லாந்து பாரீர்! பிற்போக்கு களைவீர்!

பேரறிஞர் தனி நாயகம் அடிகள் இப்போது அமெரிக்காவில் கல்வித்துறை யாய்வு நடத்தி வருகிறார். ஈழத் திரு நாட்டில் ஏற்பட்டிருக்கும் சிங்கள வெறியர்களின் செயல் குறித்து சிங்கை 'தமிழ் முரசு' ஞாயிறு பதிப்பில் அவர் தந்திருக்கும் கருத்துக்களின் சாரம் கீழே தரப்பட்டிருக்கிறது. சிங்கள வெறியர்கள் மட்டுமல்ல; இங்குள்ள இதர மொழி வெறியாளர்களுக்கும் சொல்லாய்ப்பு தந்திருக்கிறார், அறிஞர் அடிகளார்!

நம் ஈழவள நாட்டில் சிங்கள மொழியுடன் தமிழ் மொழியையும் அரசு மொழியாகவும் அமைக்காததைப்போல் பெருங் கொடுங்கோன்மை வரலாற்றிலேயே இல்லையென்று கருதுகிறேன்.

ஈழத் திருநாட்டில் நிகழ்ந்து வரும் மொழி உரிமைகள் விவாதத்தைப் பற்றியும் தமிழ் மொழியின் உரிமைகள் பற்றியும், தமிழ் மக்கள் முற்றும் அறிந்து தம் உரிமைகளைக் காப்பாற்றும் இயக்கங்கள் அனைத்திலும் பங்குபற்றுதல் வேண்டும் என்று இறைஞ்சுகின்றேன். இவ்வியக்கங்கள் வெற்றி பெறுமாறு ஒத்துழைத்தலும் பொருளுதவியும் வேண்டும். சிங்கள மக்களின் 'தனிச் சிங்களம்' என்னும் இயக்கத்தைத் தம் அன்பாலும், அறத்தாலும் நியாயத்தாலும் உறுதியாலும் தமிழ்மக்கள் வெல்லவேண்டும். நான் அரசியலிலும் கல்வித் துறையிலும் இரு மொழிகள் பன் மொழிகள் இயங்குந் தன்மையை ஒருவாறு கற்றவன். இரு மொழி நாடுகள் பன்மொழி நாடுகளுக்கு நேரில் சென்று அங்கு இருமொழி அரசியல், பன்மொழி அரசியல் எவ்வாறு தொழில் படுத்தப்படுகின்றன என்பதை நன்கு நேரில் கண்டறிந்தவன். 20-ம் நூற்றுண்டு மொழியுரிமைகள் பண்புடைய நாடுகள் அனைத்திலும் முற்றும் ஒப்புக் கொள்ளப்பட்டு நிலவுகின்றன. நம் ஈழவள நாட்டில் சிங்கள மொழியுடன் தமிழ் மொழியையும் அரசு மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் அமைக்காததைப் போல் பெருங் கொடுங்கோன்மை வரலாற்றிலேயே இல்லை யென்று கருதுகிறேன்.

உலகச் சட்ட வழக்கு:

பண்டைக்காலத்தில் தம்மொழிகளை மக்கள் அனைவரும் பேணி வந்தனராயினும் தமிழ் மக்களைப் போல் ஏனைய மக்கள் பேணினரல்லர். தமிழர் தம் நாட்டைத் தமிழ் நாடென்றும் ஏனைய நாடுகளை மொழி பெயர் தேயம் என்றும் குறிப்பிட்டுவந்தனர். இடைக் காலத்தில் ஐரோப்பாவில் சில நாடுகளில் கொடுங்கோலர் சட்டாயமாகத் தம் மொழிகளை அரசியல் மொழிகளாகத் தாம் வெற்றி கொண்ட நாடுகளில் அமைத்தனர், ஆயினும் அத்தகைய நாடுகள் விடா முயர்சியுடன் தம் மொழியுரிமைகளுக்காகப் போராடி வெற்றி பெற்றுக் கொண்டே வந்திருக்கின்றன. எட்டாவது ஹென்றி உவேல்ஸ் நாட்டையும் அயர்லாந்து நாட்டையும் கைப்பற்றிய பொழுது உவேல்ஸ் மொழியையும், ஐரிஷ் மொழியையும் மக்கள் பேசுவது சட்டத்துக்கு முரணெனச் சட்டம் வகுத்தான், நானூறு ஆண்டுகளாக உவேல்ஸ் மக்களும் அயர்லாந்து மக்களும் மொழியுரிமைகளுக்காகப் போராடி இந்நூற்றாண்டில் ஒருவாறு வெற்றி கண்டு வருகின்றனர்.

மக்களுடைய அறிவும், உரிமைகளின் உணர்ச்சியும் வளர்ந்து கொண்டே வருகின்றன. ஒரு காலத்தில் அடிமைகளை நாட்டில் சட்டத்தால் ஆமோதித்தனர். ஆனால் இன்று அடிமைத் தன்மையைச் சட்டத்தால் விலக்குகின்றனர். ஒரு காலத்தில் சாதி வேற்றுமைகளை நம் நாட்டில் பாராட்டி வந்தோம். இன்று ஜயந்தியுடன் சாதி வேற்றுமைகளைச் சட்டத்தால் ஒழித்தல் வேண்டுமென்று திட்டம் வகுக்கின்றனர் ஆட்சியாளர். எனவே 12 ம் 13 ம் நூற்றுண்டுகளில் நிலவிய மொழியுரிமைகளுக்கும் 20 ம் நூற்றுண்டில் விளங்கும் மொழியுரிமைகளுக்கும் மிக மிக வேறுபாடுண்டு. இன்று ஒரு இனத்தாரின் மொழிக்குச் சம உரிமை கொடுப்பதே முறையாகும். மக்கள் சம குடிகளாயின் ஒரு நாட்டில் சமத்துவம் விளங்குமாயின், சிறுபான்மையோர் பேசும்மொழிக்கும், பெரும்பான்மையோர் பேசும்மொழிக்கும் சம உரிமை சட்டத்தால் அளிக்கப்படல் வேண்டும், இன்றேல் சிறுபான்மையோரைக் குறைந்தவகுப்பினராகவும், குறைந்த குடி உரிமை உடையோராகவும் கருதுவதற்கு இடம் உண்டு. இச் செயலை எதிர்ப்பது தமிழ் மக்கள் ஒவ்வொருவரதும் தலையாய கடனென்க.

பின்லாந்தைப் பின்பற்றலாம்

நம் சிங்கள நண்பர்கள் தாம் ஏனைய நாடுகளின் மொழியுரிமை வழக்கத்தைத் தழுவப்போவதில்லை என்று கூறுகின்றனர். மற்றெல்லாத் துறைகளிலும் ஏனைய நாடுகளைப் பின்பற்றும் இவர்கள், மொழியுரிமைகளைப் பற்றி மட்டும் தழுவ விரும்பாததற்குக் காரணம் ஏனைய நாடுகளின் மொழி வழக்கிற்கு இவர்களின் கொள்கை நேர் முரணாயிருப்பதேயாகும். பின்லந்து தேசத்தில் இரு ஆட்சி மொழிகளுள் ஒன்பது சத விகிதத்தினர் சுவீடிஷ் மொழி பேசுகின்றனர், 90 சத விகிதத்தினர் பின்னிஷ் மொழி பேசுகின்றனர். சுவீடிஷ் மொழி சிறுபான்மையோர் மொழயாயினும் அம்மொழிக்குப் பின்னிஷ்மொழியுடன் சம உரிமை உண்டு. பின்னிஷ் மொழியை பின்னிஷ் மாகாணங்களில் கையாளுகின்றனர், சுவீடிஷ் மொழியை சுவீடிஷ் மாகாணங்களில் மட்டுமே கையாளுகின்றனர். ஆயினும் இரு மொழிகளும் அரசு மொழிகளாகவும், ஆட்சி மொழிகளாகவும் சம உரிமைகளுடன் விளங்குகின்றன, 1919-ம் ஆண்டு பின்லந்து தேசத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்டத்தில் 14-ம் உட்குறிப்பில் பின்னிஷ் மொழியும், சுவீடிஷ் மொழியும் நாட்டின் மொழிகளென்றும், இவ்விரு மொழிகளையும் பாராளுமன்றத்திலும், ஆட்சியிலும் கையாளுதல்கூடும் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

இங்ஙனமே ஸ்விட்ஸர்லந்து, கனடா, தென்னாப்பிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், ரஷியா முதலிய முப்பது இருமொழி பன்மொழி நாடுகளில் சிறுபான்மையோருடைய மொழிகளுக்குப் பெரும்பான்மையோருடைய மொழிகளுடன் சம உரிமைகள் கொடுத்திருக்கின்றனர்.

சிங்கள மக்களுக்கு உரிமை கிடையாது

சென்ற ஆறு, ஏழு தினங்களாகப் பெரும்பான்மையோருடைய மொழியை மாத்திரம் அரசியல் மொழியாக்கவேண்டும் என்னும் பிரச்னையைப் பெரும்பான்மையோரில் சிலர் வற்புறுத்தி வருகின்றனர். இஃது நீதிக்கும், சட்டத்துக்கும், மக்கள் உரிமைக் கோட்பாடுகளுக்கும் முரண்படும் கொள்கையாகும். மக்கள் அடிப்படை உரிமைகளாகிய மத உரிமை, மொழி உரிமை, பண்பாட்டுரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை முதலிய துறைகளில் சிறுபான்மையோரைப் பாதிக்கும் விதத்தில் பெரும்பான்மையோருக்குச் சட்டம் வகுக்க உரிமை இல்லை சிங்கள மக்கள் தமக்கு அரசியல் மொழியாகச் சிங்கள மொழியை அமைக்கப் பரிபூரண உரிமையுண்டு. ஆனால் தமிழ் மக்களின் அரசியல் மொழியாது என்பதைப் பற்றி முடிவுசெய்யத் தமிழ் மக்களுக்கே உரிமையுண்டு.

குடியாட்சி என்பது பெரும்பான்மையோரின் ஆட்சிதான். ஆனால் அது பல்வேறு வகுப்பினரையும் சேர்த்த பெரும்பான்மையோர் ஆட்சியாதல்வேண்டும், மேலும் தனிச் சிங்கள மக்களின் ஆட்சியன்று. தனிச் சிங்கள மக்களின் நலன்களுக்காகச் சிறுபான்மையோரின் அடிப்படை உரிமைகளை வேள்வி செய்யும் ஆட்சியுமன்று.

சம உரிமையென்றால் என்ன?

உலகில் விளங்கும் மொழியுரிமைகளின்படி இருமொழி நிலையும், ஆட்சி மொழி நிலையும் அளித்துச் சிங்களமொழி சிங்கள மக்களுக்கு ஆட்சி மொழியெனவும், தமிழ் மொழி தமிழ் மக்களுக்கு ஆட்சி மொழியெனவும் நிறுவுவதே நீதியின் வழியாகும். சம உரிமையெனில் சிங்கள மக்கள் தமிழ் கற்க வேண்டுமென்றும், தமிழ் மக்கள் சிங்களம் கற்கவேண்டுமென்னும் கருத்து அன்று. தமிழ் மாகாணங்களில் தமிழ் மக்களுக்குத் தமிழும், சிங்களமும், சிங்கள மாகாணங்களில் தமிழ் மக்களுக்குத் தமிழும். சிங்கள மக்களுக்குச் சிங்களமும் ஆட்சி மொழிகளாவதையே நாம் வேண்டுகின்றோம். இதுவே குடியாட்சி நீதியாகும்; இதுவே புத்த தருமமாகும்; இதுவே இந்த ஐயந்தி வருடத்தில் நம் புத்த நண்பர்கள் தழுவ வேண்டிய தருமமாகும்; இதுவே தமிழ் அறமாகும்; இதுவே கிறிஸ்தவ நீதியுமாகும். கீ.

புரட்சித் தம்பி

இலையுதிர் காலம்—பட்ட மரம் ஒன்று மொட்டைக் கிளைகள் விரித்து நின்று கொண்டிருந்தது. அதன் அடியில் ஒரு சிறுவன், கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருநதான். அவனது தோற்றமும், சோக நிலையும், அவனது மனதில் பெரும் கவலை சூழ்ந்திருக்கிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

''மகனே! அன்புள்ளவனே! சாப்பிட வரவில்லையா?''—அப்போது அருகே வந்த அவனது அம்மா இப்படிக் கேட்டாள்.

பையன் பேசாமல் இருந்தான். அம்மா அவன் அருகில் அமர்ந்தாள். தலையை அன்புடன் கோதினாள்.

பையனோ வாயைத் திறக்கவில்லை.

'' ரஷீத்! சாப்பிடா விட்டால் உடம்பு கெட்டுவிடுமப்பா!'' என்றாள் அம்மா,

பையனின் கண்கள் கலங்கிவிட்டன. அம்மாவின் மடியில் 'சடா' ரென்று தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்துவிட்டான். ''அம்மா!...... எல்லா பையன்களும் என்னைப் பார்த்து சிரிக்கிறாங்க அம்மா! கேலி பண்ணுறாங்க; கிண்டல் செய்யறாங்க! பண்டிகையும் அதுவுமா எனக்கு இந்தக் கிழிஞ்ச சட்டை தானா அம்மா?''—அடைபட்டுக் கிடந்த ஆற்று வெள்ளம் அணை உடைத்துப் பாய்வதுபோல் பையன் அழுதான்; அழுது கொண்டே பேசினான்.

''புது சட்டைக்கு நான் எங்கே கண்ணு போவேன்?''–அம்மாவால் சொல்ல முடிந்த பதில் அதுதான்.

''முடியவே முடியாதும்மா! என்னாலே தாங்கவே முடியாது!! எல்லாப் பையன்களும் புது சட்டைகள் போட்டுக்கிட்டு இருக்காங்கம்மா! எனக்கு மட்டும்...அம்மா!'' என்று அந்தப் பையன் மீண்டும் அழுதான்.

அவன் கண்களில் தெரிந்த ஏக்கம் அம்மாவை என்னவோ செய்தது.

ரஷீத் திடீரென்று ஏதோ ஞாபகம் வந்தவனைப் போல் ''அம்மா! நீ நல்ல அம்மா இல்லை. அப்பாதான் நல்ல அப்பா! அப்பா இருந்தால் கண்டிப்பா புது சட்டை வாங்கித் தருவாங்க!...ஏம்ம்மா...அப்பா எங்கே?...'' என்றான்!

அந்தக் கேள்விக்கு அம்மா ஏன் பதில் சொல்லவில்லை?

''அம்மா, உன்னைத்தானே? அப்பா எங்கேம்மா?...''–ரஷீத் மறுபடியும் கேட்டான்.

அம்மா வாயைத் திறக்கவில்லை; அவனது கண்கள் கலங்கி விட்டன. அவள் அப்படி மௌனம் சாதிப்பானேன்? ரஷீத்தின் அப்பாதான் எங்கே? இந்தக் கேள்விக்கு நமக்கும் விடை தேவைதான்—அதோ, தெருவில் இருவர் பேசிக்கொண்டு செல்கிறார்கள், சற்று உற்றுக் கேட்போம்:

''என்ன இது, தெருவெல்லாம் வேட்டை நாய்களைப் போல் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள், சுல்தானின் சிப்பாய்கள்?''

''என்னய்யா, உமக்குப் புரியாதா கதை எல்லாம்! துருக்கியே ஒரே கொந்தளிப்பில் இருக்கிறது. சுல்தானின் அரியாசனமே ஆட்டம் கண்டு விட்டதே!...''

''ஓகோ, புரட்சிக்காரர்களைப் பற்றி சொல்கிறீரா? ஆமாம்; அவர்களின் தலைவராமே கமால்பாட்சா, அவர் என்னதான் சொல்கிறார்?...''

''தெரியாத உமக்கு? நாட்டிலே பஞ்சத்திற்கும் பட்டினிச் சாவுக்கும் காரணமே சுல்தான் தானும். மக்களை மிருகங்கள் போல் நடத்துகிறாராம். உடனே துருக்கி குடியரசாக வேண்டுமாம்—இதுதான் அவர்கள் கொள்கை. சுல்தான் சும்மா இருப்பாரா? அந்தக் கூட்டத்தையே பிடித்து தண்டனை தர உத்தரவு போட்டு விட்டார். அதுதான் சிப்பாய்கள் இப்படி அலைகிறார்கள். தலைவர் கமால்பாட்சா எல்லாம் இருக்குமிடமே தெரியவில்லை...! நம்ம உமரைத் தெரியுமா உமக்கு?...''

''உமரா? யாரது?...''

''சிறுவன் ரஷீத் இருக்கிறானே, அவனது அப்பா—அவன்கூட புரட்சிக் கூட்டத்திலே சேர்ந்து தலைமறைவாக இருக்கிறான்...''

''அடடா!...அப்படியானால் அவனது மனைவியும், ஒரே மகன் ரஷீத்தையும் விட்டுவிட்டா?...''

''ஆமாம்; ஆமாம்! பாவம், அவர்கள் படும் தொல்லை—அப்பப்பா! சகிக்க முடியவில்லை...ஒரு வேளை உமர் சிப்பாய்களிடம் சிக்கி, தூக்கு மேடைக்குப் போய்விட்டால், அவன் மனைவியும், சிறுவன் ரஷீத்தும் என்ன செய்வார்களோ...?

''ஆமாம்; என்ன அங்கு ஏதோ கூச்சல்?...''

''கூச்சலா அது? மரண ஓலமய்யா! உணவுக்கு வழியின்றி வாடிக் கிடக்கும் மக்களிடம் சுல்தானின் ஆட்கள் கைவரிசையைக் காட்டுகிறார்கள். மறைவாக இருக்கும் தலைவர்கள் எங்கே என்று மிரட்டுகிறார்கள்! விரட்டுகிறார்கள்; அடிக்கிறார்கள்—இந்தக் காட்சியை எல்லாம் கண்டு சகிக்காமல்தான் கமால்பாட்சா போராடுகிறார்...''

அவர்கள் இருவரும் பேசிக் கொண்டே போய் விட்டார்கள்.

மரத்தடியிலே உட்கார்ந்திருந்த ரஷீத் அந்த உரையாடலை முழுதும் கேட்டான். அவனது அப்பா எங்கே? அவன் மனதைக் குடைந்து கொண்டிருந்த இந்தக் கேள்விக்கு விடை கிடைத்து விட்டது. அவன் அப்பா 'புரட்சிக்காரர்களில் ஒருவர்—தன் நாட்டார்' தான் பிறந்த பூமியில் பிறந்தோர் மன்னன் என்ற மதேன் மத்தனால் சித்திரவதை செய்யப்படுவது கண்டு மனம் வெதும்பிய கமால் பாட்சாவின் கூட்டத்தில் ஒருவர்—'பணக்காரர்களின் காலடியில் ஒரு பட்டினிப் பட்டாளமே ஏன்?' என்ற கேள்வி கேட்டு, விடை காணப்புறப் பட்டுவிட்ட மாவீரர்—ரஷீத் புரிந்து கொண்டான், தன் தந்தை யார் என்று—அவர் எங்கே என்று—அவர் செய்து வரும் தொண்டு என்ன என்று!

'சடா'ரென்று திரும்பினான். பக்கத்தில் அம்மாவைக் காணோம். அவள் எப்போதோ அந்த இடத்தை விட்டுப் போய் விட்டாள். ரஷீத் அவசர அவசரமாக எழுந்தான். குடிசையை நோக்கி ஓடினான். அம்மாவைத் தேடினான். அங்கே அவள் இல்லை. சுற்றுமுற்றும் உற்றுப் பார்த்தான். தெருவின் கோடியில் அவள் சென்று கொண்டிருந்தாள். அவள் எங்கே போகிறாள்?

ரஷீத் தெருவில் இறங்கினான். அம்மாவைத் தொடர்ந்து ஓடினான். ''அம்மா! அம்மா!'' என்ற தன் அன்பு மகனின் குரல் கேட்டு நின்றாள் அம்மா!

''அம்மா; அம்மா! எங்கே போகிறாய்?'' என்று பதட்டத்துடன் கேட்டான்.

''அவசரப்படாதே ரஷீத்! உன் நிலை எனக்குப் புரியும்—இதோ வாங்கி வந்து தருகிறேன். அழாதே அப்பா!'' என்றாள் அம்மா!

ரஷீத்துக்குஒன்றுமேபுரியவில்லை. ''இன்றுதான் அம்மா புரிந்தது—நீ ஏன் இன்று வரை என்னிடம் சொல்லவில்லை...?'' என்றான்.

அவன் தன் அப்பாவைப் பற்றிக் கேட்டான். ஆனால் அம்மாவோ, ''கண்ணே! மற்ற பையன்கள் புத்தாடை உடுத்திக் கொள்ளும் போது நீ மட்டும் எப்படிப் பொறுப்பாய்? உன் பிஞ்சு மனம் அந்த வேதனையை எப்படித் தாங்கும்? இன்று வரை நான் அதை உணராத அறிவிலியாக இருந்து விட்டேன். என் கையில் கொஞ்சம் பணம் இருக்கிறது. சென்ற ஓராண்டு காலமாக நான், நாம் சாப்பிட்டது போக சேமித்து வைத்த சில்லரைகள்! இப்போது உனக்கு சட்டை வாங்கித் தரப் போகிறேன். இந்தப் பணம் என்னிடம் இருப்பது பற்றி உன்னிடம் சொல்லாததிற்கு மிகவும் வருந்துகிறேன். கவலைப்படாதே கண்ணே! மற்ற பணக்காரப் பையன்களுக்கு முன்னால் நீ இனி தலை குனிய வேண்டாம். மிகமிக உயர்ந்தரக பட்டுச்சட்டையே உனக்கு வாங்கப் போகிறேன். இதோ பார், பணத்தை!'' என்றாள் அம்மா. அவளது கையிலே சில்லரைக் காசுகள் நிரம்பிய பை ஒன்று இருந்தது!

ரஷீத் 'வெடுக்'கென்று அந்தப் பையைப் பிடுங்கினான். ''அம்மா! எனக்கு சட்டை வேண்டாம்!'' என்றான் திடீரென்று.

அம்மாவுக்கு எதுவுமே புரியவில்லை. சட்டை, சட்டை என்று நச்சரித்தவன் இப்படி திடீரென்று மாறுவானேன்?—என்று குழம்பினாள். ''கண்ணே...'' என்றாள் அன்பொழுக!

''அம்மா!...நீ இத்தனை நாள் அப்பாவைப் பற்றி ஏன் மறைத்து வந்தாய்? நான் தெரிந்து கொண்டு விட்டேன், என் அப்பா எங்கே என்று. நாட்டுமக்களின் நல்வாழ்வுக்காக அவர் போராடுகிறார்; எனக்கு மட்டும் பட்டுச்சொக்காயா? வேண்டாம்! வேண்டவே வேண்டாம்!'' என்றான். பணப் பையுடன் எங்கேயோ ஓடினான்.

தூரத்தில் மலையடிவாரத்தில் சுருண்டு கிடந்தனர் ஏழைகள். உணவின்றி அவர்கள் உருக்குலைந்து தோன்றினர். ரஷீத் அங்கு ஓடினான். பணப் பையை அவிழ்த்தான். சில்லரைகளை எடுத்தான். எல்லோருக்கும் கொடுக்க ஆரம்பித்துவிட்டான். அவ்வளவுதான்; அவனைச் சுற்றி ஒரு கூட்டமே சூழ்ந்து கொண்டது. இப்போது அவர்களின் முகத்தில் கொள்ளை மகிழ்ச்சி! பல நாள் பட்டினியின் கொடுமையை அனுபவித்தவர்கள் அல்லவா அவர்கள்?

அவன் செயலைக் கண்ட தாயின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. அப்போது 'ரஷீத்!' என்று ஒரு உரத்தக் குரல் எழும்பியது. அது யாருடைய குரல்? ரஷீத் திடுக்கிட்டான். தன் தந்தையின் குரல் போலல்வா இருக்கிறது? ''ரஷீத்!'' -மறுபடியும் எழும்பிற்று அதேகுரல்.

ரஷீத் சுற்றிலும் பார்த்தான். தூரத்தில் மலைப்புதர்களுக்கு நடுவே—சுல்தானின் சிப்பாய்களுக்கு மத்தியிலே—கையில் விலங்கோடு நின்று கொண்டிருந்தான் ரஷீத்தின் தந்தை உமர். மலைக் காடுகளில் மறைந்திருந்த அவன் பிடிபட்டு விட்டான்.

''அப்பா!'' என்று அலறிக் கொண்டு ஓடினான் ரஷீத்!

ஆனால், சிப்பாய்களோ, உமரை அடித்து இழுத்துக் கொண்டு சென்றுவிட்டார்கள்.

உமர் மறைந்து கொண்டிருந்தான். ரஷீத் தன் சிறிய கரங்களைத் தூக்கி ஆட்டினான்.

அவனது கண்களில் நீர் துளிர்த்தது. அந்தக் கண்ணீர், 'என் தந்தையின் தொண்டை இனி நான் செய்வேன்' என்று உறுதி கூறுவதைப் போல் இருந்தது.

—சொர்ணம்

உயர்தர மூங்கில்கள்! சிறந்த கீற்றுகள்!
பெரிய கொட்டகைகளும் பந்தல்களும் அமைப்பதற்கேற்ற
எல்லா வகையான மூங்கில்களும்,
3 அடி, 4 அடி, 6 அடி நீளமுள்ள கீற்றுகளும்
குறைந்த விலைக்கு கீழ்க்கண்ட இடத்தில் விற்பனையாகி வருகிறது
பெரும் வியாபாரிகளும் வாங்கிப் பயனடையலாம்,
கிடைக்குமிடம்;
என். எஸ். பங்களா, சங்கரம்பிள்ளை ரோடு, திருச்சி டவுன்.

ஓ. எம். சுப்பிரமணியன்
ஓ. எம். சுப்பிர...



இந்த வாரம் பரிசு பெறும்
தோழர்,
★ பி. ஏ. கேசவன்,
புது வீடு,
மணி நகர், அகமதாபாத்-8.

மு. ஆறுமுகம்;
கீழ்க்கோடுங்காலூர்

(?) உங்கள் மாநாட்டில் வட நாட்டுப் புத்தருக்குச் சிலை நிறுவி கொண்டாடியது ஏன்?

நாகத்திடம் ரத்தினமிருந்தால் அதைத் தூக்கியா எறிவது? அதைப் போலத்தான்!

துரை. முருகேசன்; காரமடை.

(?) அறிவிலும் உயர்வானது எது?

எதுவுமில்லை!

ஜி. ராஜாராம்; சிங்கம்புணரி.

(?) மறைந்து போன காங்கிரசின் தூண்கள் திரும்பி வந்தால்...... என்ன ஆகும்?

கூரையில்லாத மாளிகையாக இருக்கும்!

நாஞ்சில் மாவட்ட
தி. மு. க.
நிதிக்காக
இலட்சிய நடிகர்
எஸ். எஸ். ராஜேந்திரன்
குழுவினர் நடிக்கும்
இரு நாடகங்கள்!
★
நாகர்கோயில்
லட்சுமி தியேட்டரில்
22--6--56 அன்று
மு. கருணாநிதியின்
மணிமகுடம்
★
23--6--56 அன்று
கரூர் சேதுராமன் தீட்டிய
புதுவெள்ளம்
கட்டணம்:
ரூ. 10, 5, 3, 1-8-0, அணா 12.

எஸ். மொய்தீன் காதர்;
கத்திவேள்ளை.

(?) நேரு சிறு வயதில் பொய் பேசிய துண்டா?

ஆமாம்; பெரிய வயதிலும் செய்து வரும் பல பிழைகளை அவர் பால வயதிலும் செய்து வந்திருக்கிறார்!

ப. வடமலை; செங்குன்றம்.

(?) காமராசருக்கு எப்போது கவர்னர் பதவி கிடைக்கும்?

அவரும் ராஜபாளையத்தாராகும் போது!

எஸ். கந்தசாமி; மாகாளிப்பட்டி

(?) கடவுளுக்கும் கழுதைக்கும் உள்ள வித்யாசமென்ன ?

கடவுள் சாப்பிடுவதாகச் சொல்லப் படுபவைகளை குருக்கள் தின்பான்; ஆனால் கழுதை சாப்பிடுவதைஅதை மேய்ப்பவன் தொட மாட்டான்!

திருமாறன்; சிவகங்கை.

(?) காமராசர் யார்?

ஆச்சாரியார் செய்த பிழைகளினால் உருவானவர்!

காந்தன்; திருமழிசை.

(?) ஆச்சாரியார் ஆட்சிக்கும் காமராசர் ஆட்சிக்கும் என்ன வித்யாசம் ?

முப்புரி நூல்தான்!

ஜி. சுப்ரமணியம்; புதுவை.

(?) எல்லோரோடும் சேர்ந்து கொண்டு இந்த ராமநாதபுரம் ராஜாவும் ஏன் தட்சிணப் பிரதேச கோஷம் போடுகிறார் ?

குருட்டுப் பூனை விட்டத்தில் தாவுகிற கதைதான்!

ரே. வெங்கடாசலம்;
இராமநாதபுரம்.

(?) காமராசரின் முதுகெலும்பு எங்கே?

டெல்லி செங்கோட்டையில் தேசியக் கொடிக் கம்பமாக இருக்கிறது!

டி. ஐயாக்கண்ணு; மதுரை.

(?) விநோபாவின் பிரார்த்தனைக் கூட்டமொன்றில் காமராசர் அழைப்பின்றி கலந்து கொண்டாராமே ?

ஆமாம்; சென்னை சட்டசபைக்கு மட்டுமென்ன—அவரை பாக்கு வைத்தா அழைத்தார்கள்?

கண்ணபிரான்; புதுப்பட்டி

(?) யார் பிடித்த முயலுக்கு மூன்றே கால் ?

வாலுக்கும் காலுக்கும் பேதம் தெரியாதவன் பிடித்த முயலுக்கு!

சேகர்; கல்லாவி

(?) காமராசர் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ஊர் ஊராகச் சென்று வைக்கோல் திரட்டிக் கொண்டிருக்கிறார், தேர்தல் காலத்தில் 'மாட்டு'க்குப் போடுவதற்காக!

சுப. முத்தையா; காரைக்குடி.

(?) சுப்ரமணியம் இந்த மாநிலத்துக்கு முதலமைச்சராக வந்தால்...?

விரைவில் ஆச்சாரியார் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரராகி விடுவார், தனது சேஷ்டைகள் காரணமாக!

மோகனவேல்; ஆரணி

(?) அதிக காலம் ஆயுள் பெறுதவைகள் என்னென்ன ?

ஈசலின் இறகு; நேருவின் பேச்சு; ஆச்சாரியாரின் பதவி!

எம். எம். கே; முதுகை

(?) தேபர்ஜியின் பதவி நீடிக்கப் பட்டிருக்கிறதாமே; என்ன அர்த்தம்?

'நேரு விலாச' பொம்மலாட்டத்தின் காட்சி நேரம் நீடிக்கப் பட்டிருக்கிறதென்று அர்த்தம்!

கமலநாதன்; திருத்துரைப்பூண்டி.

(?) தட்சிணப் பிரதேசம் என்பது என்ன ?

ஆச்சாரியார் என்கிற 'பாம்பு' உரித்து வைத்துப் போயிருக்கிற சட்டை!

(★) பி. ஏ. கேசவன்; மணி நகர்,
ஆமதாபாத்.

(?) ஆலமரத்திற்கு அருகம்புல்லின் வேர் இருந்தால் ?

காமராசரின் ஆட்சியைப் போலத் தான் தோற்றமளிக்கும்!

கிருஷ்ணு மதுரை,

(?) ஜோதிகள் எப்போது தோன்றும்?

ராமலிங்கத்தை அழித்து விட்டு அருட்பெரும் ஜோதி தோன்றியது. இப்போது காங்கிரசின் ஜனநாயக லட்சியங்களை அழித்து விட்டு ஆசியாவின் ஜோதி தோன்றியிருக்கிறது!

முருங்கப்பட்டி

26-6-56 அன்று மாலை 6 மணிக்கு மாரியம்மன் கோயில் அருகில் நடைபெறும் தி. மு. க. துவக்க விழாவில், தோழர் டி. பி. அழகமுத்து அவர்கள் தலைமையில், தோழர் என். வி. நடராசன். அம்பில் தர்மலிங்கம் ஆகியோர் பேசுவர்.

கோவை மாவட்ட தி. மு. க.

24-6-56 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில். திருப்பூரில் வாலிபாளையம் ராலே நிட்டிங் கம்பெனி இடத்தில் நடைபெறும், திராவிட முன்னேற்றக் கழகக் கோவை மாவட்டக் குழுக் கூட்டத்தில் மாவட்ட உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

—ஈ. வெ. கி. சம்பத்,

மாயூரம்

29-6-56 வெள்ளி மாலை 6 மணிக்கு மாயூரம் நகரப்பூங்காவில், தோழர் ம. கி. இராமசாமி தலைமையில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, ப. உ. சண்முகம் ஆகியோர் பேசுவர்.

கருணாநிதி நிகழ்ச்சிகள்.
★
21 காலை—அறந்தாங்கி—திருமணம்
„ மாலை—திருவாரூர்—பொதுக்கூட்டம்
23— நடராசபுரம்
24 குளித்தலை—கூட்டம்

குளித்தலையில்

24-6-56 ஞாயிறு மாலை 6 மணிக்கு,
— வ. உ. சி. சதுக்கத்தில் —
தோழர் டி. பி. அழகமுத்து தலைமையில்
மு. கருணாநிதி, அம்பில் தர்மலிங்கம்,
தி. வீ. முத்து கிருஷ்ணன்
ஆகியோர் பேசுவர்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட் ரோடு, சென்னை-2